584
KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலா நிலயம்.

V7. No. 33. 23.8.1934.

க
m211,N28KN
N34.7.33
199183

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா 0-2-6.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0

புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
29 OCT 1934
MADRAS

Vol 7.] 1934 ஞு ஆகஸ்ட் மீ 23உ [No. 33

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 513
2. தமிழ்ப் பாடம்—
நைடதம்—நளன் தூதுப் படலம். 515
3. கம்பராமாயணம் (வாலிவதைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L 517
4. அப்பர் (64-கலை-இதிகாசம்—இராமன் கதை)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 520
5. இரவொன்றிற் பல பிழைகள் (அங்கம் 5. களம் 3.)
Goldsmith's—"She stoops to Conquer" 522
6. காலம்—(யாண்டு).
வித்வான் K. S. விசுவநாதசாஸ்திரி P.O.L. 523
7. இரவீந்திரநாதர் கட்டுரைகள் (தபோவனம்)
W. E. அரியநாயகம் B.A., B.D., B. Ed, &
ஆஷாதேவி M. A. 525
8. சமுத்ர சரணாகதி.
உபயவேதாந்த் வித்வான் பிரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ அண்ணங்கராசாரிய ஸ்வாமிகள் 526
9. வர்த்தமானம் 528

கலாநிலயம்

எத்தைக்கண்டு இச்சை கொள்வோம் 2.

வில் டுரோன்ட் கேட்பதெல்லாம் என்ன! இந்த உலக வாழ்க்கையில் "மகனே, நீ எத்தைக்கண்டு இச்சை கொண்டாய்; அதனை எனக்குச் சொல்லுமாற்றால் நீயே சிந்தித்துப்பார்த்து ஒருமுடிவிற்கு வா" என்பதல்லாது வேறொன்று மன்றே யது.

ஆம்! சமயங்களின்நிலை, சாத்திரங்களின் சாதனை, சரித்திரங்களின் செய்தி, எல்லாம் ஒன்று கூடி, சிந்திக்குந்தோறும் சிந்திப்பவர் மனங்களை மாழ்கும்படியே செய்கின்றன. நம் கண்ணுக்கு எட்டியவரையில் கலக்கமில்லாக் காட்சி தென்படவில்லை. மனிதர் சிரிக்கின்ற சிரிப்பெல்லாம் தசைகளின் குறுக்கமும் நீட்சியுமே யன்றி மனத்தில் அரும்பிய உவகையின் மலர்ச்சியென் றெண்ணமாட்டாமல் அமைகின்றது. பழையதென்று சமயநெறிகளைக் கைவிட்டுப் புதியதென்று பூதசாத்திர ஆராய்ச்சியைப் புகுத்திக்கொள்ளுகின்ற இவ்வுலகம் நங்கூரம் அறுந்துபோகப் பெருங் காற்றால் மோதப்பெறும் நாவாயென்ன நடுங்குகின்றதே.

எந்நிலையிலிருப்பவரும் யாவரும் எக்காலத்திலும் மனிதரென்றிருப்போர் அனைவரும் அவரவர் தாம் தற்காலம் இருக்கின்ற நிலைமையையே இனிதென்று இச்சித்து வாழ்வதற்கு அமர்வதில்லை. இதனின்று தாம் வேறோர்பதவி இனி எய்தலாம் என்னவொரு வருங்கால நம்பிக்கையே ஆதாரமாகப்பற்றிவாழ்கின்றனர். இன்ன நம்பிக்கைதான் மனிதவாழ்க்கையின் இயற்கைநிலை. இது, தத்துவ வித்தகர்க்கும் ஒக்கும், பாமர ஜனங்களுக்கும் ஒக்கும். ஏனெனில் இருக்கின்றநிலை, பெரிதென்று பாராட்டற் குரியதாகத் தோன்றுவது மிகவருமை. இந்த ஒட்டமும்பிடியும், கெஞ்சுவதும் விஞ்சுவதும், துய்த்துத் தெவிட்டுவதும் பசித்து வருந்துவதும், இந்தப்பொய்க்கூத்திற்கேயாகவா மனிதர் இப்படிப்பிறக்கின்றனர், பிறகு பிடிசாம்பராகிக் காற்றிலே தூற்றி முடிவதேயோ இவர் கதி-என்பதைச்சிந்திக்குங்கால் மானுடப்பெருமையென்பதெல்லாம்பெரும் மாயமாகவும் அவர் அடைய நிற்கின்ற கதி அவலத்தி லெல்லாம் அவலமான இழிவாகவுந் தோன்றுகின்றன. ஆயினும், அம் மாயநிலையிலும் இவ்வவலக் கதியிலும், இதுவே நமக்கியற்கை என்று, அமைந்துவிட மனிதருக்கு மனம் வருவதில்லை. "சீசி! நாம் பிறந்ததெல்லா மித்தனையோ; இவை யெல்லாம் ஏதோ இடைப்பிறவரல்களே போலும்; நம் முனைய நிலையும் மகத்தானதா யிருக்கவேண்டும், இனி நாம் எய்த நிற்கின்ற பதவியும் மகத்தானதாகவேயிருக்கவேண்டும்" என்றவோர் நம்பிக்கையை ஏற்றுக்கொண்டு அதுவே ஆதாரமாகப்பற்றி வாழ முயல்கின்றனர். இவ்வண்ணம், மனிதர் தமது தகைமையிலும் கதியின் மேன்மையிலும் நன்னம்பிக்கை வைக்கவேண்டிய ஓர் அவசியத்தை உணர்கின்ற உணர்ச்சியிலிருந்துதான் எக்காலத்திலும் பெரும் பெரும் மதங்களெல்லாம் பிறந்து பிறந்து தழைக்கலாகின்றன. உள்ளத்திற்கு ஊக்கமளிக்கும் சமய நெறிகளே எல்லாப் பெரிய நாகரிகங்களுக்கும் ஆதாரமாயிருந்தன. மானுடப் பெருமையை அதுபின்னர் அடையநிற்கின்றகதியின் மகத்து

வத்தினால் அளந்துஉணர்ந்து விரும்பவல்ல நம்பிக்கையை நல்குகின்ற நம் உபநிடதங்கள், "நான் பிரம்மம் ஆகின்றேன்" என்னும் வரையில் பெருகியுள்ள மேன்மையைக் காண்கின்றோம். மற்று, பிரம்மமே ஆகநிற்கின்ற ஒன்றற்கோ, இப்பொழுது இத்துணைத் துன்பங்கள் வாய்க்கும் என்று கேட்போருக்கு நம் கவிவரர் இரவீந்திரர், "ஆம், ஆம்; இத்துன்பங்கள் இருப்பதே மானுடப் பெருமைக்கு மிகப் பெரிய அடையாளம்; மானுடம் அற்பமேயாயின் துன்பம் என்னும் அத்துணைப் பெரிய நன்மை வாய்க்குமோ' என்று (7-வது வால்யூம், 254-வது பக்கம்) கேட்பார். இத்தகைய நம்பிக்கைகளால் மனித ரினிது வாழ்ந்தனர்.

இன்னதோர் நம்பிக்கை, பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதருக் காதாரமாயிருந்து பின் தளர்ச்சியடையத் தலைப்படுமாயின், அப்பொழுது, ஆன்மாவின் ஆனந்த நாடகமாயிருந்த மானுடவாழ்க்கையானது, இப்பொழுது, உயிர்நூல் வல்லவர் (biologists) உரைக்கும் வண்ணம், ஒரு வெறும் பூச்சிப்போர்க் கொலைக்கூத்தாகவே சுருங்கி விடுகின்றது. அலகிலாக் காலத்தின் சிகரத்தில் மனிதர் தம் பதவியின் பெருமையைத் தேடிக்கொள்வார் என்னுமந்நம்பிக்கையை அளிக்கின்ற சமயபற்றுக் கட்டழிந்து போகுமாயின், அப்புறம் இம் மானுடவாழ்க்கையில் கண்டு இச்சைகொள்வதற்குயாதொன்றும்எஞ்சவில்லையே. அவமானத்திற்கிடமான பிரசவத்திற்கும் அடியோடு படுநாசமாகின்ற மரணத்துக்கும் இடையே நடமாடுமொரு துன்பமேயன்றோபின்னர் இப்பிறவி. பூதசாஸ்திரங்கள், கண்டுபிடித்துக்கொடுக்கின்ற பலகருவிகளைக்கொண்டு பார்க்கின்ற ஒருவன், தன்னிலும் தன் இனத்திலும் வைத்திருந்த நம்பிக்கையையும், அந்நம்பிக்கைக்கு ஆதாரமாகக் கடவுளில் வைத்திருந்த பக்தியையும் இழந்து விடுகின்றான். இனி, செயற்கரிய செய்யும் பெரியோர் முயற்சிகளைக் கண்டு இவனை வியப்பதில்லை, தானும் அன்னவை முயலவேண்டுமென்ற ஊக்கங் கொள்வதில்லை; அவற்றின்பால் இவனுக்கு ஐயமும் இகழ்ச்சியுந்தான் இனிப் பிறக்கின்றன. பக்தியும் நம்பிக்கையும் மறைந்து அகல, அச்சமும் கைபறவும் இக்காலத்தின் கோலங்களாகிவிட்டன. இன்று இவ்வுலகம் உற்றிருக்கின்ற நோயின் தன்மை முக்கியமாக இதுவே யென்பதை முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும்.

செய்தவங்கள்செய்துநாம் இதனைஉணர்ந்துகொள்வோமாயின், நம்மை உய்விக்கவல்ல உண்மைகள் சில புலப்படுவது எளியதாகிவிடும். கடந்த ஐரோப்பிய யுத்தத்தின் பயனாகவே கொடுமைகள்பல அடைந்திருக்கின்றோம் என்று எண்ணுவதும் எழுதுவதும்வழக்கமாகியிருக்கின்றன. அந்த யுத்தத்தினால் இரண்டரை கோடி ஜனங்கள் மடிந்து எத்தனையோ வீடுகள் ஆளற்றுப்போயின; அதனால் நேர்ந்த பணக்குறைவு எத்தனையோ வீடுகளை இன்றைக்குச் சோறற்றதாக்கிவிட்டது. வயிற்றுப்பிழைப்பிற்கு வழியில்லாத அல்லல், உலகடங்கலும் ஜனங்களை ஆட்டிவைக்கின்றது; பட்ட கடன்களைக் கொடுக்கமாட்டாமல் வணிகவேந்தர்முதல் கைக்கூலிக்காரர்வரையில் எல்லாருந் தவிக்கின்றனர். புதியபுதிய நோய்கள் புத்தீசல்போல்தோன்றி மக்களைக் கொள்ளை கொள்ளையாய் இடுகாட்டிற்குச் சாய்த்துக்கொண்டுபோகின்றன. ஆயினும் இவ்வகை, பணக்குறைவையும் ஆயுள் சிதைவையும்விட ஆழமான ஒருவறுமையால் நாம் ஆற்றமாட்டா அல்லல்படுகின்றோமே. உற்றுநோக்குங்கால், வறிதாயிருப்பன நம்முடைய பணப்பெட்டிகளும் மனையகங்களும் அல்ல; அடியுடன் வறிதாகக்கிடப்பன இப்பொழுது நம்முடைய இதயங்களே. மானுடப் பெருமையின் நினைவு இதயத்தினின்று அகன்றுவிட்டது; முன்னே கண்டபடி மரணத்தாலும் அழிக்கமாட்டா ஒருபொருளும் பயனும் இனி மானுடவாழ்க்கையில் காணவோ இயல்வதில்லை. இதயத்தை விற்று வாழ்க்கைக்கு வேண்டியவைகளை வாங்கி நிறப்பப்புகுந்தோம். அது வறியதானதுதவிர இதுவுமே நிரம்பியபாடில்லை. இன்னவாறு சமய உணர்ச்சி சிதையும்படி தலையெடுத்திருக்கின்ற இந்தப் பூதசாத்திர (Science) அறிவு சாதித்திருப்பதுதான் என்ன? எது எவ்வாறாயினும் மனிதனே மிகவும் முன்னேறி இருக்கின்றான் என்பதிற்சந்தேகமில்லை என்று கூறுவார், சிந்தனை ஏதுமில்லாச் சிலர்.

ஐரோப்பாக் கண்டம் ஒரு நூற்றைம்பது வருடங்களுக்குமுன் என்ன கருத்தைக் கொள்ளத்துவக்கியதோ அதனையே இன்று இந்தியர் மேற்கொள்ளப் புகுந்திருக்கின்றனர். "கடவுளின் கால்களில் **விழுந்து** காலத்தை வீணாக்குவதினும் மோட்டார்கார்களின் காலில் விழுந்து கும்பிட்டால் இந்நாட்டிற்கு நற்கதியுண்டாகுமே" என்று ஓர் தமிழ்ப்பண்டிதர் ஒரு பிரசங்கத்தில் தம் "சகோதர சகோதரிகளுக்கு" அறிவுறுத்திய கொள்கையை பண்டைய தலையங்க மொன்றில் ஆராய்ந்து காட்டியிருக்கின்றோம். இப்படிச் சமயநெறிகளுக்கும் உணர்விற்கும் மாறாக, பூதசாத்திர அறிவையும் கருவியையும் பாராட்டவேண்டும் என்னும் பரபரப்பே மிகுந்த நிபுணர்கள் இந்தச்சாத்திரத்தின் அறிவு வளர்ந்தால், செல்வம்பெருகிச் சனங்கள் எங்குமேஇன்பமுடன் வாழ்வார்என்று கூறினர்; இந்தச் சாத்திர அறிவு வளர்ந்தால், உடனே உண்மை புலப்பட்டுச் சனங்கள் விடுதலை யடைந்தவர்களாவாரென்றுஞ் சாற்றினர். பொதுஜனக் கல்வி பரவப்பரவ, இந்தச் சாத்திரங்கள் காண்கின்ற முடிவுகளின் அறிவும் பரவி, மூடபக்திகளிலிருந்து விடுதலை யடைந்த சனங்கள் ஜனநாயக ஆட்சியைக் கைக்கொள்ளத் தகுதியுடையவர்களாவார்களென்று கருதினர். இத்தகைய எண்ணங்கள் ஐரோப்பாக் கண்டத்திற்கு நூறுவருடகாலம் ஊக்கம் அளித்துவந்தன. டார்வின் முதலாக ஈன்ஸ்டின் வரையில் எத்தனையோ பல பூதசாஸ்திர நிபுணர்கள் தோன்றித் தம் ஆராய்ச்சியின் முடிவுகளினால் உலகத்தை வியக்கச்செய்தனர். அறிவால்பெறக்கூடியவைகளனைத்தையும் நாம் பெற்றுவருகின்றோம் என்ற ஊக்கம் நாளுக்குநாள் வளர்ந்தது. வானுலகத்தில் இழந்த நம்பிக்கையெல்லாம், மறுமையை எதிர்பார்த்த ஊக்கத்தை யெல்லாம், மண்ணுலகத்தில் இம்மையில் செலுத்தி, ஏதோ தமக்கு இணையிலாச் செல்வமும் சிறப்பும் இன்பமும் வாய்க்க நிற்கின்றன என்றெண்ணி யெண்ணி மகிழ்ந்திருந்தனர். இந்தச் சாத்திரங்கள் கண்டுபிடித்த பல கருவிக[illegible]

3ட
m211,N28K N
N34.7.23
199183

பூமியைப் பலர் மாற்ற முயன்றனர். அதன் கொள்கைகளைக்கொண்டு இப்பிரபஞ்சத்தையே மாற்ற முயன்றனர் சிலர். இதனால், இன்றைய தினம் அடைந்திருக்கின்ற நம் நிலைமைஎன்ன? இலவுகாத்த கிளியேயாயினர் அப்பெருமக்கள். வானசாஸ்திரம் இரஸாயனம் உயிர்நூல்மனநூல் முதலியசாத்திரங்கள் ஒவ்வொன்றாய்த் தாம்கண்டுபிடித்தமுடிவுகளைத்தெரிவிக்கத்தெரிவிக்க, இம்மானுடவாழ்க்கையென்பதெல்லாம் ஓயாப் பெரும்போரும் மரணமுமா யமைந்ததொரு சித்திரமாகத் திரண்டுதோன்றத் தலைப்படவே, சென்ற நூற்றாண்டின் முதலில் துவக்கிய உற்சாகமும் மகிழ்ச்சியும் இந்நூற்றாண்டின் முதலிலிருந்து வருடத்திற்கு வருடம் படிப்படியாகக் கையறவும் துக்கமுமாக மாறி மனிதர் இன்று ஆற்றமாட்டா அல்லலில் ஆழ்ந்து, இந்த வாழ்க்கையில் இனி எத்தைக் கண்டு இச்சை கொள்வோம் என்ன ஏங்கிக்கிடக்கின்றனர். அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டோர் கதியைக் கூறும் பழமொழி இதனினுங் கொடுமையாய் என்றும் அமைதி பெற்றதில்லை.

ஏனெனில், மகத்தானவைகளென்று நாம்முன்னர் மதித்திருந்தனவெல்லாம் இப்பொழுது அற்பத்தினுமற்பமாகத் தோன்ற நேர்கின்றன. கடவுள்தன் திருவடிகளை வைத்திருக்கும் புண்ணிய பீடமென்னக் கருதப்பட்ட இப்பூமியானது, வானசாஸ்திரிகள் கற்றுஆய்ந்துஅறிந்து காட்டுங்காட்சியால், ஒரு சிறிய சூரியனைச் சுற்றித்திரிகின்ற ஒரு கிரகமே யென்றும், முன் அந்தச் சூரியனினின்று வெடித்துச் சிதறிய ஒரு சிறு பொறியாகவேஇது உற்பத்தியாயிற்றென்றும், பிறகு அந்தச்சூரியனுடனே ஒருநாள்மோதிக்கொண்டு பற்றியெரிந்து முடிந்துவிடுமென்றும் அறிகின்ற நாம், மனிதன் சாதித்த காரியங்களின் கதையைச்சொல்வதற்கு ஒரு நிழலுமேநிற்காமலா நீங்கிவிடப்போகின்றான் என்ன அலமரவேண்டி வருகின்றது. இனி, இப்பூமியின் அமைப்பை ஆராய்கின்ற நிபுணர்களை (Geologists) கேட்டால், "ஆயிரமாயிர வருடங்களுக்குமுன் இப்பூமி உருகியவோர் அனற்பிழம்பாக இருந்தபோதும் இதனில் உயிர்ப்பிராணிகள் இருந்ததில்லை, இனி ஆயிரமாயிரம் வருடங்களுக்குப்பிறகு இது வரவரக் குளிர்ந்துகுளிர்ந்து பனிக்கட்டியாய் உறைந்துவிடும்போது உயிர்கள் இருக்கப்போவதுமில்லை; ஆதலால், உயிர்களெல்லாம் இடையில்தோன்றி இடையே மறைந்துவிடுகின்ற ஒரு சிறு செய்தியேயன்றி வேறன்று; எத்தனையோ உயிர்வகைகள் இதன்முன்னர் இப்பூமியில் இருந்தவை இன்றைக்கு இருந்தவிடந் தெரியாமல் மறைந்துவிட்டன" என்று கூறுவார். உயிர்நூல் நிபுணர் நம்மை முடிவிற்குக்கொண்டுவந்திருக்கும் வகை மிகவும் கொடுமையானது. "ஒவ்வொரு பிராணியும் மற்றொருபிராணியைக் கெடுத்தே வாழலாகின்றதென்றும், ஒன்று மற்றொன்றிற் கிரையாகும் கொலைக்களமே இப்பூமியென்றும், மற்றதைக்கொல்லுஞ் சக்தியே தன்னைக் காக்கின்றதென்றும், மக்கட்பேறு என்பதெல்லாந் தற்கொலையேஎன்றும், தனக்கொரு பிரதிநிதிவைத்துப் பின் தான் சாகமுயலும்முயற்சியேகாதலெனப்படுகின்றதென்றும்" கூறுவாரிவர். இனி, இவ்விருபதாம் நூற்றாண்டின் நூதனக் கோலமாகத் தோன்றியிருக்கின்ற மனநூல் வல்லவர் (Psycho analysts), கருணை வாய்மை ஈகை கற்பு அனையவைகள் ஒன்றும் மனிதனுக்கு இயற்கையன்றென்றும், மனிதன் இயற்கையின் உண்மைப்படி அளவற்ற அனேகவித ஆசைகளுடையவனாய் இருக்கின்ற ஒரு பிண்டமென்றும், அவ்வாசைகளை அடக்கமுயல்வது இயற்கைக்கு விரோதமான தீமையென்றும், மனம்போனபடியெல்லாம் போகின்ற வீரத்தைக் கையாள்பவனே மனுஷத்வத்தை அடைகின்றானென்றும், ஆசைக்கு இரைதேடுவதல்லாமல் மனிதன் அடையநிற்கின்ற கதி வேறொன்றுமில்லையென்றும் சாற்றுவார். இவர் திறத்தினை முன் வரைந்துள்ள "உண்மையில் உழல்வார் திறம்" (4-வது வால்யூம், 13, 14, 15, 16,17-வது இதழ்கள்' என்னுந் தலையங்கங்களில் ஆராய்ந்து காட்டியிருக்கின்றோம்.

தமிழ்ப்பாடம் 133.

நைடதம்—நளன்தூதுப் படலம்

[501-வது பக்கத் தொடர்ச்சி]

முற்றிழை வனமுலை முயங்கு நன்னலம்
பெற்றில னெனினும்வேள் பெய்யும் வாளியான்
மற்றுயி ரிறப்பினும் வான வேந்தொடு
சொற்றது மறுக்கில னென்று சொல்லுவான். 27.

(உரை). முற்று-முற்றியனவும், இழை-ஆபரணங் கணிந்தனவுமான, வனம்- அழகிய, முலை - தமயந்தியின்முலைகளை, முயங்கும்-தழுவுகின்ற,நல் நலம்-நல்ல பாக்கியத்தை, பெற்றிலன் எனினும் - நான் பெறாதவனாயினும்; வேள் பெய்யும் வாளியால் - மன்மதன் சொரியும் அம்புகளால், (மற்று - அசை), உயிர் இறப்பினும் - என் ஆவி நீங்கினாலும், வானவேந்தொடு - இந்திரனுடன், சொற்றது - சொன்னது, மறுக்கிலன்- நான் தவறவோமாட்டேன், என்று - என்று நிச்சயம் செய்துகொண்டு, சொல்லுவான் - (இந்திரனை நோக்கிப் பின்வருமாறு நளன்) கூறுவான்.

குறிப்பு:—சொன்னது, என்பது வலித்தல்விகாரத்தால் சொற்றது என ஆயிற்று.

எப்பொரு ளாயினும் யாவ ருள்ளமுங்
கைப்படு நெல்லியங் கனியிற் காணுநீர்
துப்பிதழ் மடந்தைபாற் றூது போகெனச்
செப்பிய தெவன்கொ லெஞ்சிந்தை யோர்ந்துமே. 28.

(உரை). எப்பொருள் ஆயினும் - எந்தப்பொருளையும், யாவர் உள்ளமும் - எவ்வெவர் மனத்தில் இருப்பவைகளையும், கைப்படு நெல்லி அம் கனியில் - உள்ளங்கை நெல்லிக்கனிபோல், காணும் நீர்- காணவல்ல நீங்கள், எம் சிந்தை - நானும் தமயந்தியும் ஒருவரை ஒருவர் காதலித்து இருக்கின்றோம் என்னும் எங்கள் இருவருடைய கருத்தையும், ஓர்ந்தும் - அறிந்திருந்தும், (பிறகு என்னையே) துப்பு இதழ்மடந்தைபால் - பவளம்போன்ற உதடுகளையுடைய அத் தமயந்தியின் இடத்தில், தூதுபோக என - தூதாகப் போகும்படி, செப்பியது எவன் கொலோ - சொன்னது ஏனோ!

விரிவுரை:—"எல்லார் உள்ளமும் அறியவல்ல நீர், எம் மிருவருடைய மனநிலையையும் அறிந்திருந்தும்

என்னையே அவள்பால் தூதுபோக்கு மிது எக்கருத்தாலோ அறிகிலேனே'', என்கின்றான் நளன். "இது தகவோ உமக்கு'' என்ற நிந்தையும் இதனில் அடங்கியிருக்கின்றதெனக் கொண்டால் அது நளனுடைய குணத்திற்குக் குறைவாகும்.

குறிப்பு:—'எவன்' என்பதற்கு இங்கு 'யார்' என்னும்பொருள் இல்லை. 'எவன்' என்பதற்கு ஏது அல்லது ஏன், என்னும் பொருளும் இருக்கின்றது. உண்மையில் 'எவன்' என்னுஞ் சொல்தான் 'என்' என்று குறுகி வரலாகின்றது.

—

வழங்கிய நும்முரை மறாது சென்றியான்
மொழிந்தன னாயினு முன்ன ரேயெனை
விழைந்தவத் தளிரியல் வெள்கு றாதுளங்
குழைந்துநும் பான்மணம் பொருந்தல் கூடுமோ. 29.

(உரை). வழங்கிய - சொன்ன இந்த, நும் உரை - உங்கள் வார்த்தையை, மறாது - மறுக்காமல், யான் - நான், சென்று - தமயந்தியினிடம் போய், மொழிந்தனன் ஆயினும்- சொன்னேனாலும், முன்னரே - முன்னமே, எனை - என்னை, விழைந்த - காதலித்திருக்கின்ற,அத் தளிர் இயல் - தளிர்போன்ற மெல்லிய தன்மையை உடைய அந்தத் தமயந்தி, வெள்குறாது-நாணமின்றி, உளம்குழைந்து - மனம் இசைந்து,நும்பால்மணம் பொருந்தல் கூடுமோ - மணம் செய்துகொண்டு உங்களோடு பொருந்தியிருப்பதென்பது இயலுமோ, (என்று நளன் மேலும் கூறினான்).

விரிவுரை:—"என்னையே முன்னர்க் காதலித்துள தமயந்தி உங்களைவிரும்பி மணங்கொள்வது அமையாதாதலின் இத்தூது பயனின்றிப்போம்'' என்னும் நளனது இவ்வுரையில், "ஆதலின் இதனை விடுமின்'' என்னுங் குறிப்பு அடங்கியுளதுபோலும்.

குறிப்பு: — சென்று + யான் = சென்றியான், நிலைமொழியீற்றில் குற்றியலுகரம்இருக்க வருமொழி முதலில் யகரம் வந்ததால் குற்றியலிகரம் தோன்றியது.

தளிரியல் - உவமத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

—

என்னவேந் துரைத்தலு மிசைத்த சொன்மறு
நின்னைமெய்ப் பரதனை நிகரில் பார்த்தனை
முன்னினு நினைத்தவை யனைத்து முற்றுமா
லன்னநீ யேகிலே தரிய தாகுமே. 30.

(உரை). என்ன - என்று, வேந்து உரைத்தலும் - நளவேந்தன் சொன்னதும், (இந்திரன்), "இசைத்த சொல் மறு நின்னை - சொன்ன சொல்லை மறுக்காத உன்னையும், மெய்ப் பரதனை-உண்மையையுடைய பரதனையும், நிகரில்பார்த்தனை-ஒப்பில்லாத அர்ச்சுனனையும், முன்னினும்-மனத்தால் நினைத்தாலும், நினைத்தவை அனைத்தும் முற்றும்-எண்ணிய காரியம் எல்லாம் கைகூடும். (அப்படியிருக்க) அன்ன நீ - அவர்களில் ஒருவனான நீயே, ஏகில் - போனால், ஏது அரியது ஆகும் - எந்தக் காரியந்தான் முடியாமல் போகும்? (ஆகையால் ஐயமின்றிச் செல் என்றான் இந்திரன்.)

விரிவுரை:—கருமங் கைகூடுவது இயலாதென்று இயம்பிய நளனிற்கு இந்திரன் உரைத்த உத்தரம் இது.எவ்வகை இடையூறிருப்பினும், பார்த்தன் பரதன் நளன்ஆகிய இம்மூவரையும் மனத்தில்நினைத்துக்கொண்டு ஆரம்பித்தால் காரியம் கைகூடாமற் போகாது என்பதுசாஸ்திரம். நளனை நினைத்தவர்களுக்கே காரியம் கைகூடுமென்னில் அவனே செல்கின்ற காரியம் கைகூடித்தான் தீரவேண்டுமென்பது பின்னும் நிச்சயமாகின்றது. இவ்வாறு நளனை நினைத்தாலே நிச்சயம், அதனினும் நிச்சயம் அந்நளனே சென்றக்கால் என அமைந்திருப்பது மேன்மேலுயர்ச்சியணி (6—647).

ஆனால் இந்நிச்சயமெல்லாம் பழுதாய்முடிந்ததே. நளனே சென்றும் தமயந்தி அமரரைமணக்க இசையவில்லை. ஆயின் சாத்திரம் பொய்த்ததோ, வேறுதான் ஓர் பிழையுண்டோ! உண்மை யாதெனில் சாஸ்திரத்தில் குறித்தவன் நிடதாட்டு அரசனாகிய இந்த நளன் அல்லன். கடக்கரிய நெடுங்கடலைக் கடத்தற்கு அணையிட்டுச் சீதையை இராமன்பால் எய்துவித்த வானரத் தலைவனாகிய நளனை நினைத்துச்செய்வார் கருமமே முற்றும். ஈதுணராத இந்திரன், பெயரின் ஒற்றுமையால் மயங்கினான்.வானரவீரன்நளனை நினைக்கவேண்டியது போக நிடதநாட்டரசனையே செலுத்தினாலும் என்ன பயன். 'நளனையே தூதனுப்பும்போது நமக்குஎன்ன குறை' என்ற துணிவினால் மற்றிருவராய பார்த்தனையும் பரதனையுங்கூட மனத்தால் வழுத்தித் தொழுது நினைத்திலர் போலும் அத்தேவர். ஆதலின், தமயந்தி மணம்பொருந்த இசையாததும் வியப்பாமோ.

இங்குக்குறித்துள பார்த்தன் பாண்டவர்களுள் ஒருவனாய அர்ச்சுனன் அல்லன்; கார்த்தவீர்யார்ச்சுனனாவான். பரதனும், சகுந்தலையின்புத்திரனாகிய பரதனேயன்றித் தயரதன் மைந்தனல்லன்.

இதன்மேல் நளன் தூதிற் கிசைந்தான். ஆயினும், "காவலாளர் காணாது கன்னிமாடத்துட்சென்று தமயந்தியைக்கண்டுயான்பேசுவது எங்ஙனம்'' எனநளன் வினவ, பிறரது கண்களுக்குத் தென்படாமல் செல்லவல்ல "மாலிகாஞ்சனம்'' என்னும் மந்திரத்தைஇந்திரன், அவனுக்குக் கற்பித்து அனுப்பினான். வள்ளலும் ஏகித் தமயந்திவாழ் குண்டினபுரத்தைச்சேர்ந்தனன்.

—

இலக்கணம்

C. மகரமெய்யீறு (தொடர்ச்சி)

II மகரமெய்யீறு + இடையின மெய்ம்முதல்.

இடையின மெய்களில் மொழிக்கு முதலில் வருவன யகரம் வகரம் ஆகிய இரண்டே.

வருமொழிமுதலில் யகர வகர மெய்கள் வர, நிலைமொழி யீற்று மகரமெய் சில தொடர்களில் கெட்டும் சில தொடர்களில் கெடாமலும் புணரும்.எத்தொடர்களில் கெடும், எத்தொடர்களில் கெடாது எனின்—வருமொழிமுதலில் உயிர்வர, மரம் + அடி — மரவடி எனக்கெடுகின்ற தொடர்களிலெல்லாம் (6—635) இடையினம் வரினும் நிலைமொழி யீற்று மகரமெய் கெடுமென்றும், மற்றத் தொடர்களில் கெடாதென்றும் கொள்ளவேண்டும். அதன்படி,

(a) பின்வருந் தொடர்களில் நிலைமொழியீற்றுமகரமெய் வருமொழிமுதலில் யகர வகரங்கள் வருங்கால் கெடும்.

1. ஆறும்வேற்றுமைத் தொகை:—

சைந்நியம் + யானை = சைந்நிய யானை.
மரம் + வேர் = மரவேர்.
முகம் + வடிவு = முகவடிவு.

குறிப்பு:—(i) நிலைமொழி வினையாலணையும்பெயராயிருக்குமாயின், வருமொழிமுதலில் யகர வகரங்கள் வர ஆறும் வேற்றுமைத் தொகையினும் நிலைமொழியீற்று மகரமெய் கெடாது.

சிறியேம் + வாழ்வு = சிறியேம் வாழ்வு.
அடியேம் + வினை = அடியேம்வினை.
வெல்வேம் + யானை = வெல்வேம்யானை.
(வெல்வோமாகிய எங்களுடைய யானை)

(ii) நிலைமொழி, குறிலோடு சேர்ந்த மகரமெய்யை யீற்றிலுடைய இரண்டெழுத்துச்சொல்லாயின், வருமொழிமுதலில் யகர வகரங்கள் வர, ஆறும் வேற்றுமைத் தொகையினும் நிலைமொழியீற்று மகரமெய் கெடாது:—

எம் + யானை = எம்யானை
நும் + வீடு = நும்வீடு
தம் + வடிவு = தம்வடிவு
நம் + வேழம் = நம்வேழம்

2. மற்ற வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைகளில் மகரமெய் கெடும்.

மரம் + வாள் = மரவாள் (மரத்தை அறுக்கும் வாள்) 2-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

மரம் + யாழ் = மரயாழ்(மரத்தால் செய்தயாழ்) 3-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

குலம் + வண்மை = குலவண்மை (குலத்திற்கு உரிய வண்மை) 4-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

பட்டினம் + வண்டி = பட்டின வண்டி (பட்டினத்திலிருந்து வருகின்ற வண்டி) 5-ம்வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.

வனம் + யானை = வனயானை (வனத்தில் வசிக்கின்றயானை) 7-ம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

3. பண்புத் தொகை:—

சிங்கம் + விலங்கு = சிங்கவிலங்கு (சிங்கமாகியவிலங்கு) ஐராவதம் + யானை—ஐராவதயானை.

4. உவமத் தொகை;—

பவளம் + வாய் = பவளவாய்.
பதுமம் + விழி = பதுமவிழி.

(b) பின்வரும் தொடர்களில், நிலைமொழி யீற்றிலுள்ள மகரமெய், வருமொழி முதலில் யகர வகரங்கள் வர, கெடாமல் இயல்பாயிருக்கும்:—

குலம் + யாது = குலம்யாது—எழுவாய்த்தொடர்.

வெல்லும் + வீரன் = வெல்லும் வீரன் = பெயரெச்சத்தொடர்.

ஓடும் + யானை = ஓடும் யானை—வினைமுற்றுத்தொடர்.

அழைத்தாலும் + வாரான் = அழைத்தாலும்வாரான் வினையெச்சத் தொடர்.

புலியும் + யானையும் = புலியும் யானையும் - இடைச்சொற்றொடர்.

நிலம் + வாங்கினான் = நிலம் வாங்கினான், 2-ம்வேற்றுமைத் தொகை.

குலம் + வரும்(பெருமை) = குலம்வரும் (பெருமை) குலத்தால் வரும் பெருமை, 3-ம் வேற்றுமைத் தொகை.

சுந்திரம் + வங்கணன் (இவன்) = சுந்திரம் வங்கணன்,(சுந்திரம் என்பவனுக்கு வங்கணன் இவன், வங்கணன் = காதலன்), 4-ம்வேற்றுமைத் தொகை.

நகரம் + விலகினான் = நகரம் விலகினான் (நகரத்திலிருந்து விலகினான். 5 - ம் வேற்றுமைத் தொகை.

நிலம் + வீழ்ந்தான் = நிலம் வீழ்ந்தான் (நிலத்தில் வீழ்ந்தான்) 7-ம் வேற்றுமைத் தொகை.

குளம் + வயல் = குளம்வயல் (குளமும் வயலும்) உம்மைத்தொகை.

குறிப்பு:—ஈற்று மகரமெய் கெடுவதும்கெடாததும் பெரும்பான்மை இவ்விதிகளுக்கு அடங்கிநிகழ்கின்றன. ஓரோவழி ஒன்றிரண்டு இவைகளுக்கு மாறாக வழங்கினும்வழங்கலாம். எனினும், அதனால்இவ்விதிகளுக்குக் குறையில்லை. அவைகளும் பொருள்மயங்கக்கூடிய தொடர்களாகவே யிருக்கும். நிலவிலை, என்னுந் தொடர் நிலத்திற்கு விலை என நான்காம் வேற்றுமையாக விரியலாம், ஆயின் மகரமெய் கெடலாகாது. எனினும் நிலத்தினுடைய விலை என ஆறும்வேற்றுமையாகவும்விரியலாம். ஆதலின், நிலம் + விலை, நிலம் விலை என இயல்பாய்ப் புணராமல் நிலவிலை என நிலைமொழி யீற்று மகரமெய் கெட்டே புணர்கின்றது.

குறிப்பு:—நிலைமொழி யீற்று மகரமெய் கெடாமல் புணர்கின்ற தொடர்களில், வருமொழி முதலில் யகரம் வர, அம்மகரமெய் இயல்பாய் நிற்பதுடன் முன் உரைத்த (7-427) விதிப்படி இகரந் தோன்றினுந் தோன்றலாம்.

நம் + யானை = நம்யானை, நம்மியானை
தொழுதேம் + யாம் = தொழுதேம்யாம்,தொழுதேமியாம்
குலம் + யாது = குலம்யாது, குலமியாது.

இவ்வண்ணம் இகரந்தோன்றிப்புணர்வது பெரும்பாலும் செய்யுள்களில் காணப்படுகின்றது.

—

கம்பராமாயணம்

கிஷ்கிந்தாகாண்டம்—7. வாலிவதைப் படலம்

[506-வது பக்கத் தொடர்ச்சி]

சோரியின் நொய்ய நீரின் சோதனை.

வாலியினின்று வேற்றுமை விளங்கும்பொருட்டுக்
கொடிப்பூமாலைமிலைந்துவந்து மறுபோர்புக்கசுக்கிரீவன்,

தயங்கு தாரகை நிரைதொடுத் தணிந்தன போல
வயங்கு சென்னியன் வயப்புலி வானவல் லேற்றோ
டியங்கு மார்ப்பின னெல்லைவந் தடுதிறல் வாலி
பயங்கொளப்புடைத்தெற்றினன்குத்தினன்பலகால்

[பிரகாசிக்கின்ற நக்ஷத்திரங்களை வரிசையாகத் தொடுத்து அணிந்ததுபோல மலர்மாலை விளங்குகின்ற முடியை உடையவனாகி, வலிய புலியும், மேகத்தில் தோன்றுகின்ற வலிய இடியேறும் கேட்டுத் தளரும்படி ஆரவாரஞ் செய்துகொண்டு வேகமாக வந்து, போர் செய்கின்ற திறமை வாய்ந்தவாலிபயங்கொள்ளும்படி அவனை அடித்துமோதிப் பலமுறை குத்தினான்.]

பின்னிருந்த துணைவனது உதவி உறுதியானவுடன் சுக்கிரீவன் குத்துச் சற்றே பலமாகவிழுவது அதிசய

மன்று. வாலி அஞ்சினன்போல் தோன்றுகின்றனாயினும், உண்மையி லவன்மனத்தி லுழக்கிய ஐயமே பெரியது. போர்தோற் றோடியவன் மீண்டு வந்ததுமன்றி இம்மறுபோரினை இவன் துவக்கும் வேகமும் அதிகமாயிருத்தலால் ஒருகால் தன் நன்மனையாட்டி தாரை, இராமனவனுக் குயிர்த்துணையாய்ப் போந்துளனென்றுரைத்தது உண்மையே தானோ என அயிர்த்தனன் இவ்வாறு,

அயிர்த்த சிந்தைய னந்தகன் சூலகுலைந் தஞ்சச்
செயிர்த்துநோக்கினன் சினத்தொடு சிறுநகைசெய்யா
வயிர்த்த கையினுங் காலினுங் கதிர்மகன் மயங்க
உயிர்த்த லந்தொறும் புடைத்தன னடித்தனனுதைத்
[தான்.

[ஐயமுற்ற மனமுடையவனாய், யமனும் குலைந்து நடுங்கும்படி கோபித்துப்பார்த்து, அக்கோபத்தோடு சிறுசிரிப்புஞ் சிரித்து, வயிரம்பாய்ந்த தன் கைகளாலும் கால்களாலும், சூரியனது மகனான சுக்கிரீவன் மயக்கமடையும்படி அவனது உயிர்நிலைகளிலெல்லாம் குத்தி அடித்துஉதைத்தான்.]

இப்பொழுது யாதுசெய்வான் சுக்கிரீவன். வாலி தன்னை வாட்டியவேகமிது அச்சத்தின்கிளர்ச்சியாகத் தோன்றுவதற்கில்லை.

கக்கி னனுயி ருயிர்ப்பொடுஞ் செவிகளிற் கண்ணி
னுக்க தாங்கெரிப் படலையோ டுதிரத்தி னொழுக்கந்
திக்கு நோக்கினன் செங்கதி ரோன்மகன் செருக்கிப்
புக்கு மீக்கொடு நெருக்கின னிந்திரன் புதல்வன்

[சுக்கிரீவன்பெருமூச்சுடன் உயிரைக்கக்கினான். அவன் காதுகளிலிருந்தும் கண்களிலிருந்தும் நெருப்புப்படலங்களும் இரத்தப்பெருக்கும் வெளிப்பட்டன. அப்பொழுது சூரியகுமாரனான சுக்கிரீவன் இராமபிரான் இருந்ததிசையை நோக்கினான். அதுகண்ட, இந்திரன் புதல்வனாகிய வாலி செருக்குடன் மீண்டும்புகுந்து மேன்மேல் நெருக்கினான்]

கண்ணுங் காதும் கனலும் இரத்தமும் உயிருடன் சொரியும்போது, இனித் தஞ்சமடைந்து உய்யும்படி தன் பாதத்தை நோக்காமல் வேறோர் திக்கினைச் சுக்கிரீவன் நோக்குதலும், வாலியின் ஐயமும் அதனோடு அவன் சீற்றமும் வலுத்திருத்தல் வேண்டும். புக்கு மீக்கொடு நெருக்க நேர்ந்ததன்பொருள் இதுவேயாம். தானிருந்த திக்குச் சுக்கிரீவன் நோக்குகின்றவரையிலவனுக்கோர் உதவியும் உய்க்காமல் தாழ்த்தது எம்பிரானுக்குஇயற்கையே. சுயமுயற்சி அத்துணையுமொடுங்கி, தன்செயலால் ஆவதினி யாதொன்று மில்லை எனத் தேர்ந்து பிறகு கையற்ற நிலையினராய்த்தன்னை எதிர்நோக்கிஅழைப்போர்க்கே கைகொடுக்கவருவார் கடவுள். அவ்வாறின்றி,தம் காரியத்திற்குத் தம்மோடு கலந்து கடவுளையும் ஒருகை கொடுக்கும்படிவேண்டினால்அதற்கவ ருடன்பட எக்காலுங்கண்டிலம். முன்னும், கஜேந்திரன், தன் துதிக்கையைத் தூக்கி அழைத்தபின்னரே ஆழிவந்தது; பின்னும், பாஞ்சாலி தன் சீரையைப்பற்றிய பிடியை நெகிழ்த்துக் கோவிந்தா என்று கூப்பிட்டபின்னரே, தானையும் வளர்வதாகும். இப்பொழுதும்சுக்கிரீவன் தானிருந்ததிக்கினை வேறுகதியற்று நோக்கியபின்னரே இராகவன்வில்லிற்கணை தெரிந்து பூட்டலுற்றான். அதற்கிடையில் வாலி,

எடுத்துப் பாரிடை யெற்றுவாம் பற்றியென் றிளவல்
கடித்த லத்தினுங் கழுத்தினுந் தன்னிரு கரங்கண்
மடுத்துமீக்கொண்டவாலிமேற்கோலொன் றுவாங்கித்
தொடுத்துநாணொடுதோளிறுத்திராகவன் றுரந்தான்

[இவனைப் பிடித்தெடுத்துத் தரையில்மோதிவிடுவோம் என்றெண்ணித் தன்தம்பியான சுக்கிரீவனது இடுப்பிலும் கழுத்திலும் தன் இரண்டுகைகளையுஞ் செலுத்திஅவனை மேலேயெடுக்க, அவ்வாலியின்மீது இராமபிரான் ஓர்அம்பையெடுத்துத் தன்வில்லில்வைத்து, அதன்நாணியையும் தன் தோள்களையும் இறுக்கிச் செலுத்தினான்]

காரும் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச்
சேருஞ் சூசியிற் சென்றது நின்றதென் செப்ப
நீரு நீர்தரு நெருப்பும்வன் காற்றுங்கீழ் நிமிர்ந்த
பாருஞ் சார்வலி படைத்தவ னுரத்தையப் பகழி

[அந்த இராமபாணம், நீரும் நீரைஉண்டாக்கிய தீயும் அந்நெருப்பை உண்டாக்கிய காற்றும், இவைகளுக்கு ஆதாரமாய்க் கீழேவிளங்குகின்ற பூமியும், ஆகியஇந்நான்கு பூதங்களுங்கொண்டிருக்கின்ற வலிமையைப் பெற்றுள்ள வாலியின் மார்பை, சுவைமிக்கநீண்டவாழைப்பழத்தைத் தைத்துச் செல்கின்ற ஊசிபோல எளிதில் துளைத்துச்சென்றது என்றால், இனி என்ன கூறுவதற்கிருக்கின்றது]

அலங்கு தோள்வலி யழிந்தனன் றம்பியை யருளான்
வலங்கொள் பாரிடை யெற்றுவா னுற்றபோர் வாலி
கலங்கிவல்லிசைக்கால்கிளர்ந்தெறிவுறக்கடைக்கால்
விலங்கன் மேருவும் வேர்பறிந் தாலென வீழ்ந்தான்

[விளங்குகின்றதோள்களின் வலிமையழிந்தவனும்தன் தம்பியுமாகிய சுக்கிரீவனிடம் கருணைகாட்டாமல் அவனை வலிய தரையில் மோதிக் கொல்வதற்குத் தொடங்கிய போர் வல்ல வாலியானவன், இராமபாணத்தால் நிலைகலங்கி, கற்பாந்தகாலத்தில் வலியவேகத்தையுடையஊழிக்காற்று எழுந்து வீசுவதால், மேருமலையும் நிலைபெயர்ந்து விழுந்ததுபோல விழுந்தான்]

"உயிர்நிலை தளர்ந்துநின்ற தன் தம்பியை அருளினனல்லனே இவ்வாலி, இவன் இங்ஙனம் வீழ்தலுந் தகும்" என்னுமோர்நினைவை நம்மனத்தகத்தே விளைவித்து, இந்தத் துன்பக்காட்சியின் வெம்மையைச் சிறிது கம்பர் தணிக்கமுயல்கின்றனர். ஆயினும், "அண்ணாவுனக்கபயம்" என்னாது இன்னமும்இராகவன் இருந்ததிசையையே நோக்கியபரிசை நோக்குங்கால், வாலி போரிற்குரிய தறுகணாண்மையே தன்பகைவன்பால் செலுத்தினனென்னுஞ் சிந்தனைகொண்டு தேறலாம். தன்மார்பினுள் பாணந் துளைக்கின்றதானாலும், வாலி சுக்கிரீவனைப் பிடித்த பிடியைப் பின்னும் இறுக்கித் தன்உயிரோடு அவனது உயிரையும் உடன்கொண்டு செல்வதாயின்சென்றிருக்கலாம். இப்பொழுது அவனைக் கொல்லவேண்டுமென்ற ஆர்வத்திலும் தன்னைக் கொல்லப்புக்கவன் யாரென்று தெரிந்துகொள்ளவேண்டு மென்னும் ஆர்வமே வாலிக்கு அதிகமாக, சுக்கிரீவனை நெருக்கிய கை நெகிழ்ந்து,

வெற்றி வீரன தடுகணை யவன்மிட லுரத்தூ
டுற்ற தப்புறத் துறுதமு னுறுவலிக் கரத்தாற்
பற்றி வாலினுங் காலினும் பிணித்தகப் படுத்தான்
கொற்ற வெங்கொடு மறலியுஞ் சிரதலங் குலைந்தான்.

[வெற்றி பொருந்திய வீரனான இராமனது, பிழையாமற் கொல்வதும், வாலியின் வலிமைமிகுந்த மார்பில் சேர்ந்ததுமான அந்தப்பாணம், துளைத்துக் கழன்று அப்பால் சென்றுவிடாததன்முன்னே, அதனை அவ்வாலி மிக்கவலிமையுடைய தன் கைகளால் பிடித்து, வாலினாலும் கால்களாலுந் தடுத்து அப்பாற்போகவொட்டாமற் தடுத்துநிறுத்திவிட்டான். இதுகண்டு, வெற்றியுடையகொடிய பயங்கரமான யமனும்,"இம்முறை வாலி பிழைத்துவிடுவானாயின் அவன்உயிரைக்கொள்ளமுயன்ற தான் தப்புவதெங்ஙனம்" எனத் தலைகலங்கினான்.]

இராமன் எய்த அச்சுடுசரம், கல்லாப்புல்லோர்க்கு நல்லோர் சொன்ன பொருளென அப்பாற் கழன்று போகாமல் வாலி தடுத்துப் பிடித்தானானாலும், துளைக்கின்ற அதன் வேகத்தை நிறுத்திப் பறிக்கமாட்டாமல் "அழுந்து மிச்சரம் எய்தவன் யார்கொல்" என அயிர்த்து,

எற்றுங் கையினை நிலத்தொடு வெரிப்பொறி பறப்பச்
சுற்று நோக்குறுஞ் சுடுசரத் தைத்துணைக் கரத்தாற்
பற்றி வாலினுங் காலினும் வலியுறப் பறிப்பா
னுற்று ளுமையி னுலைவுறு மலைபென வுருளும்

[தன்கைகளைத்தரையின்மேல்மோதுவான், கண்களில் நெருப்புப்பொறிபறக்க எல்லாப்பக்கங்களையும் பார்ப்பான்;அந்த உக்கிரமான அம்பைத்தன் இரண்டுகைகளாலும் பிடித்து வாலின் உதவியையும் கால்களின் உதவியையுங் கொண்டு வலியப்பறித்தெடுப்பதற்குத் தொடங்கி அதுமுடியாமல் வருத்தமடைவான்; மலைபோலப் புரள்வான்]

புரண்டு, இவ்வம்பினை எய்தவர் தேவரோவென்று அயிர்ப்பான். பின், தேவர் இக்காரியஞ்செய எண்ணுவாரலர், எண்ணினும் என்மீது பாணம் எய்யவல்ல ஒரு ஆற்றல் அவர்களுக்கு இல்லை என்பான்; மற்று வேறுஇதுசெய்தார் யாவரோவென எண்ணிஎண்ணி, இன்னவரென்று தெரியாதஓருவர் கையிலா தனக்கு மரணம் என்று நகை செய்வான். திருமூர்த்திகள் மூவருக்கும் தானேஒப்பாகின்றஒருஇறைவன்செயலையாகுமோ இது என்று சொல்லிக்கொள்வான். மற்று,

நேமி தான்கொலோ நீலகண் டன்னெடுஞ் சூல
மாமி தாங்கொலோ வன்றெனிற் குன்றுரு வயிலு
நாம விந்திரன் வச்சிரப் படையுமென் னடுவட்
போமெ னுந்துணை போதுமோ யாதெனப் புழுங்கும்

[என்மார்பைத் துளைக்கின்றஇந்தப்படை, திருமாலின் சக்ராயுதந்தானோ,கறுத்த கழுத்தையுடைய சிவபிரானது நீண்ட சூலாயுதந்தானோ, அவையல்லவென்றால், கிரௌஞ்சமலையை ஊடுருவிய முருகக்கடவுளின் வேலாயுதமும் அச்சத்தைத் தருகின்ற இந்திரனது வச்சிராயுதமும் என் மார்பிலே நுழைந்துசெல்லுமென்று சொல்லத்தான் கூடுமோ! இது யாதோ! எனப் புழுங்கினான்]

வில்லி னாற்றுரப் பரிதில்வெஞ் சரமென வியக்குஞ்
சொல்லி னானெடு முனிவரோ தூண்டினா ரென்னும்
பல்லி னாற்கடிப் புறம்பல காலுந்தன் னுரத்தைக்
கல்லி யார்ப்பொடும் பறிக்கும் பகழியைக் கண்டான்.

[ஆரவாரத்துடன் தன் மார்பைக்கல்லிப் பெயர்க்கின்ற அது ஒரு அம்பேஆவதைக் கண்டவாலி,"இந்தக்கொடிய அம்பு ஒரு வில்லில் வைத்து எய்யத்தகுந்ததுஅன்று" என வியந்து, மற்று, பெரியமுனிவர்தம் சொல்லின் ஆற்றலால் இதனை எவினார்களோ என்பான். கோபத்தால் தன்பற்களைப் பலமுறை கடித்துக்கொள்வான்]

சரமெ னும்படி தெரிந்தது பலபடச் சலித்தென்
உரமெ னும்பத முயிரொடு முருவிய வொன்றைக்
கரமி ரண்டினும் வாலினுங் காலினுங் கழற்றிப்
பரம னின்னவன் பெயாறி குவனெனப் பறிப்பான்

[இதுவொரு அம்பே யென்பது தெரிந்தது; பலவாறு சொல்லிச்சொல்லிச் சலிப்பதால் என்ன பயன்? எனது மார்பு என்னும் இடத்தை உயிருடன் உருவிய இதனை, என் இரண்டு கைகளாலும் வாலாலுங் காலாலும் பற்றிக் கழற்றி, இதனைச் செய்த அந்தப் பெரியமனிதன் யாவன் என்று அவன்பெயரை நான் அறிந்துகொள்வேன்,என்று பிடுங்குவானானான்.]

மனத்தின் திண்மையாலும் உள்ளத்தின் ஊக்கத்தாலும் அவ்வம்பினை வாலி பிடுங்கிவிட்டான். அவ்வளவில் அலைகடல் உலகில் பொங்கிப் பாய்ந்ததென இரத்தம் பெருகிற்று.

வாசத் தாரவன் மார்பெனு மலைவழங் கருவி
ஓசைச் சோரியை நோக்கின னுடன்பிறப் பென்னும்
பாசத் தாற்பிணிப் புண்டவத் தம்பியும் பசுங்க
ணேசத் தாரைகள் சொரிதர நெடுநிலஞ் சேர்ந்தான்.

[வாசனையுடைய மலர்மாலையை அணிந்த வாலியின் மார்பாகிய மலையினின்றுபெருகிய இரத்தமாகிய ஆரவாரமுடைய அருவியைப் பார்த்து, உடன்பிறப்பென்னும்அன்பினால் கட்டப்பட்ட அச்சுக்கிரீவனும், பசுமையான தன் கண்களிலிருந்து நேசத்திற் கடையாளமான நீர்த்தாரை பெருகப் பெரிய தரையில் விழுந்தான்.]

கொடுமையிழைத்தவனாயினுந் தன் ஒரு தமையனை வஞ்சனையால் வீழ்த்திநிற்கின்றஇச்சுக்கிரீவனைவெறுத்து நம் மதிப்பினின் றகற்றுவண்ணம் அவன் பசுங்கண்களினின்று நேயத்தாரைகளைப் பெருக்கி, குருதி சோரக் கிடக்கும்வாலியினயலி லிவனை விழவைக்கின்றார் கம்பர். உடன்பிறப்பெனும் அப்பாசத்தால் அழுகின்றான் இவன். "நீரினுந் தடித்தது குருதி" என்றோர் ஆங்கிலப் பழமொழி உதிரத்துறவின் பிணிப்பினை வற்புறுத்தும். ஆயினும், இங்குச் சுக்கிரீவன் வடிக்கும் கண்ணீரினும் வாலியிழக்கும் உதிரமோ, பாவம், சாலத் தடித்ததே. இக்குரக்கினச் சுக்கிரீவனும் அரக்கர் குல வீடணனும் இதனை உறவின்வகையாலன்றி உண்மையாகவே சோதிக்கப் புக்கனர். மற்றுச் சுக்கிரீவன் திறத்தில் ஒன்றுகூறலாம். தன் தமையனுக்கிவன் கண்ணீர்வடித்துஅழுதுவிழுந்தனன். போர்க்களத்தில் இராவணன் விழுந்துஉயிர்துறந்தவளவில், வீடணன், துயர்கூர்ந்தொன்றும் புரியாமல் வாளாவிருக்க,"இவனுக்குஏற்ற வான்முறை வகுத்தியென்ன இராகவன் அருளத் தள்ளி வீழ்ந்தனன் அவன்மேல் வீழ்ந்தான்" எனக் கம்பர் காட்டுகின்றார். இராகவன் இட்ட கட்டளைப்படி விழுகின்றவோர் கருமமாகத்தோன்றுகின்றது அது. கட்டளை மாத்திரமன்றி,'தள்ளியருள' என்பதுவே அச்சொற்களின் அன்வயமாயின், இராமன் விபீடணனை இழுத்துக்கொண்டுபோய், வான்முறை விழுந்தழும்படி இராவணனது உடலத்தின் மேல் தள்ளத்தான்வேண்டி நேர்ந்ததோவென்று ஐயுறலாம். விழுந்த அவன், மனமார வருந்திய பரிசேனும் கண்ணார அழுத பரிசேனும் காணவில்லை. "பகுவாய் ஆர அரற்றினான்" என்றே கம்பர்கூறுவார். அவ்வாறு வாயார அரற்றியகாலத்தும்,

போர்மகளைக் கலைமகளைப் புகழ்மகளைத்
தழுவியகை பொருமை கூரச்
சீர்மகளைத் திருமகளைத் தேவர்க்குந்
தெரிவரிய தெய்வக் கற்பின்
பேர்மகளைத் தழுவுவா னுயிர்கொடுத்துப்
பழிகொண்ட பித்தா பின்னைப்
பார்மகளைத் தழுவினையே திசையானைப்
பணையிறுத்த பணைத்த மார்பா

என்பதனைய சிற்சில நிந்தனைமொழிகளன்றி மாழ்கிய மனத்தின் தோற்றம் அவன்வயின் காண்பதற்கில்லை

வாலியும் இராவணனும் தம்தம் தம்பிமார்க்கு ஒவ்வோர்வகையில் கொடுமையே செய்தனர். சுக்கிரீவன் தனக்குச் செய்த கொடுமையையே தீர்த்துக்கொள்ள முயன்றவன். வீடணன், அதனோடு அவ்விராவணன் சீதைக்குச் செய்யப்புக்க கொடுமையினாலும்வெருளி கொண்டவன். அவ்வெப்பம் இன்னும் இருந்ததாற்றான் இராவணன் வீழ்ந்தபின்னும் அவன்பொருட்டிவன்கண்களில் நீர்த்துளி திரள இயலவில்லை.

அப்பர்

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்.—31. இதிகாசம்

[463-வது பக்கத் தொடர்ச்சி]

IV. இராமன் சீதையை வௌவியது பாதகமா?

இராவணன் கல்வி கேள்விகளிற் சிறந்தவனென்றும் யாவராலும்வியக்கத்தக்க நற்குணங்களும் வாய்ந்தவனென்றுங் கண்டோம். மயக்கும் * மாயங்களில் வல்லவர்களாகி வானத்திலும் நீரிலும் உலவும் சக்தி பெற்ற அரக்கர்களுக்கு இறைவன் ஒருமானுடப்பெண்ணின் அழகினால் எவ்வாறு மயங்கினானென்பது, இலங்கை நகர மாடவீதியிலுள்ள யாவரும் ஆச்சரியப்படத் தகுந்ததே. இது பெருந்திணைக்குக் கொடியதோருதாரணமன்றோ? சாதாரணமாய் மனிதரை ஒருபொருளாக இராவணன் என்றும் எண்ணியதில்லை. அவன் தேவிமார்களில் ஒருத்தியும் மனிதரென்னும் இனத்தைச் சேர்ந்தவள் அல்லள். இயக்கர், தேவர், விஞ்சையர் முதலானவர்; அழகில் உயர்ந்தவர்மாத்திரமாயிராமல், உருவத்திலும் பெருத்தவர். அத்தகைய மனைவியருடன் வாழ்ந்த இராவணன், தனது குலத்திற்குப் பொருந்தக்கூடாத மிகச்சிறிய உருவம்பெற்றவள்மீது காதல்கொள நேர்ந்தது இயற்கைக்கு † விரோதமானது. இது சூர்ப்பனகை இராமன்மீது மோகம் கொண்ட செய்கைக்குச் சமானமானதாயினும், இராவணன் கலை கல்வி ஆண்மை முதலிய நற்குணங்களுக்கும், அவனைச் சுற்றியிருக்கும் "பண்டிதர், பழையவர், கிழவர், பண்பினர், தண்டலின் மந்திரத் தலைவர்" முதலோர் அமைப்புக்கும் இடையே பொருந்தாக் காமம் அவனிடம் நேர்ந்த விது இயற்கையின் அமைப்பன்று; மாயன் தன் திருவுள்ளத்தில் உன்னிய பெருமாயமே, அரக்கரை அழிப்பான்வேண்டி நிலைபெற்று நின்றதென நாம் அநுமானிக்கலாம். இதை அப்பர் "பாசமுங் கழிக்க கில்லா அரக்கர்" என்னும் சொற்றொடரிற் குறிப்பிடுகின்றார்.

முற்றின நாள்க ளென்று முடிப்பதே காரணமாய்
உற்றவன் போர்களாலே யுணர்விலா வரக்கர் தம்மைச்
செற்றமால் செய்தகோயில் திருவிரா மேச்சுரத்தைப்
பற்றிநீ பரவு நெஞ்சே படர்சடை யீசன் பாலே.

என்னும் இராமேச்சுரத் திருப்பாசுரத்தாலும் இதன் உண்மையை உணரலாம்.

இராவணன் இயற்கையில் அரக்கனாய்ப் பிறந்திடினும், செயற்கையாலிவன், நான்கு வேதங்களும் கரைகண்டவனாதலாலும், தவம் முதலியவற்றைச் சிறக்கச் செய்யக்கூடியவனாதலாலும், பல்லாயிர வருடங்கள் தவத்தில் தனது தேகத்தையும் பெரும்பாகம் நெருப்புக்கிட்டுப் பிறகு சுவர்ணமயமானதாய் அத்தேகம் பிரமன் வரத்தினால் வளரப்பெற்றவனாதலானும், இவன் தேவதத்துவமும் பெற்றிருந்தனன். சூரபன்மனைப்போல் * சூரியனைத் தன்னகருக்கு மேலே செல்லாமல் ஒதுங்கிப்போக வைத்தஇவன், எத்தகைய திறமுடையவனென்னலாகும்? இவ்விராவணன் அரக்கரில் அழகுடையவனாயினும் மனித ஸ்திரீகள் காமுறத் தக்கவனல்லன். பேருருவம் பெற்ற இவன் சிற்றுருவப் பெண்ணை அவள் எவ்வளவு அழகு வாய்ந்தவளாயிருந்தாலும் விளையாடும் பதுமைபோல் எண்ணக்கூடியவனன்றி அவளை மனைவியரில் ஒருவராக்கத் தேகதத்துவம் பெற்றவனாகக் காணப்படவில்லை. இவனை வர்ணிக்கும் அப்பர்,

வீரமிக் கெயிறு காட்டி விண்ணுற நீண்ட ரக்கன்
கூரமிக் கவனைச்சென் றுகொன் றுடன்கடற்படுத்துத்
தீரமிக் கானிருந்த திருவிரா மேச்சு ரத்தைக்
கோரமிக் கார்தவத்தாற் கூடுவார் குறிப்பு ளாரே.
—திருவிராமேச்சுரம்—திருநேரிசை—5.

என்றனர். இவனைக்கண்டு சீதை பயந்தனளே யன்றி வியந்ததில்லை. இஃதிவ்வாறாக, இராவணன் சீதையை வவ்வியது போகத்தாலேயோ, அல்லது வேறு துர்க்குணத்தாலேயோவெனின், வால்மீகி இராமாயணத்தின்படி அவ்வளவும் மோகமேயென்று கூற இடமில்லை. இவன் சீதைக்குத் தவணை கொடுத்துத் தன் மனதிற்கு அத்தவணைக்குள் இசையவேண்டுமென்று கட்டளையிட்டானென்றும், இராவணன் சீதையுடன் வாதிக்குஞ் சமயத்தில் அவன் மனைவியரில் ஒருத்தி இவனைக் கைபைப்பிடித்து இழுத்து "என்னைக் காட்டிலுமா சீதை உனக்குச் சுகந்தரப் போகின்றாள்; வா, வேண்டிய சுகம் என்னுடன் பெறலாம்" என்று மொழிந்து அவனை அசோகவனத்திலிருந்து அழைத்துப்போயினாளென்றும் கூறும் விஷயங்களைக் கவனித்துநோக்கின், அத்துணை மோகம் சீதையினிடம் இராவணனுக் கிருந்ததாகக் காணப்படவில்லை. ஆயினும் சீதையை விடாமல் தன்வசமாக்கவேண்டுமென்னும் ஆழ்ந்த நோக்கத்தில் இராவணன் பிடிவாதமாயிருந்தது

---

*மயங்கு மாயம் வல்ல ராகி வானி னோடு நீரும்
இயங்குவோருக் கிறைவனாய விராவணன்றோள்நெரித்த
புயங்க ராக மாநடத்தன் புணர்மு லைமா துமையாள்
முயங்கு மார்பன் முனிவரேத்த மேய முது குன்றே
—சம்பந்தர்-திருமுதுகுன்றம்—பண்-பழந்தக்கராகம். 8.

†உரையுணராதவன்காமமென்னும்முறுவேட்கையான்
வரைபொரு தோளிறச் செற்ற வில்லிமகிழ்ந் தேத்திய
விரைமரு வுங்கட லோதமல்கு மிராமேச்சுரத்
தரையர வாடநின் றாடல்பேணு மம்மா னல்லனே.
—சம்பந்தர்-திருவிராமேச்சுரம்-பண்-காந்தாரபஞ்சமம்-4

*பகலவன் மீதியங் காமை காத்த பதியோன்றனை
இகலழி வித்தவ னேத்து கோயி லிராமேச்சுரம்
புகலி யுண்ஞான சம்பந்தன் சொன்ன தமிழ்புந்தியால்
அகலிட மெங்குநின் றேத்த வல்லார்க் கில்லையல்லலே.
—சம்பந்தர் - திருவிராமேச்சுரம் - பண் - காந்தார பஞ்சமம் 11.

அவனுடைய ஆணவமே. தான் தின்னக்கூடியபொருளாயிருக்கும் மனிதப்பெண்ணை, தன்வசம் ஏன் திருப்பக்கூடாதென்னும்கருத்தே அவன்மனதிற்குடிகொண்டிருந்தது. இராவணன் வயதிலும் இளையனல்லன், ஆகையால் இராவணன் காமத்திற்கு அடிப்படையாயிருந்தது அவனது கர்வமேயாம். நந்தியெம்பெருமான் தடுத்தும் கைலாயத்தை எடுத்தெறிய வேண்டுமென்றெண்ணிய ஆணவமலமே அவனை விட்டுநீங்காதிருந்தது. இராமன் திருமாலின் அவதாரமென்றும் சீதை பெரியபிராட்டியென்றும் அவன் சற்றும் அநுமானிக்காதவனல்லன். ஆயினும் அவன் அகங்காரி; அவர்கள் மனிதர்களென்றும் தன் உணவுப்பொருள்களென்றும் எண்ணி மிக அலட்சியம் செய்தது ஒருபுறம் அவன் ஆணவம்; அதை வற்புறுத்தி நிலை நிறுத்த மற்றொருபுறத்தில் மாயன் மாயையும் வலிவாய் நின்றது. திருப்பாற்கடல் கடைந்தபோது, அமுதம் பங்கிடவந்த மோகினிக்கு அரக்கர் மயங்கியதுபோலும், தாருகவன இருடிகளை அம்மோகினி வடிவமே கெடுத்தது போலும், இராவணன் உயிரை வவ்வுதற்கென்றே, அம்மோகினிதத்துவம் சீதையின்பால் இப்பொழுது நின்றது. ஆதலால் அதன் முன்னர், அவன் கல்வி கேள்வி நற்புத்தி வயது அநுபவம் முதல் யாவும் சுழல்காற்றுற்ற இலவம்பஞ்சுபோல் நிலைகுலைந்து சுழன்றன. எனின், எக்காரணத்தினாலும், எப்புத்தியாலும், எக்கேடுகளாலும் இராவணன் மனந்திருந்தாமல் உயிரைத்துறந்தாலும் துறக்கலாமெனப் பிடிவாதமாய் நின்றான்.

இவ்வண்ணம், இராவணன் ஒழுகியது திருமாலின் திருவுள்ளச் சக்தியாலே யன்றி, அவன் சுயேச்சையாயிருக்குமாயின், அவன்குணம் சீர்திருந்தி, கார்த்தவீர்யார்ச்சுனன் வாலி, ஆபினோரிடம் சமாதானஞ் செய்துகொண்டதே போல், இராமனிடத்திலும் எளிதில் சமாதானம் செய்திருப்பான். ஆயினும், அவனைச்சுற்றிய மாயன் சக்தி அவ்வாறு செய்யவிடவில்லை. இதனாலேயே விபீடணன் முதலியதம்பிமாரும், பாட்டன் முதலான ஏனைய பெரியோரும் புகட்டிய நற்புத்தி இவன்காதிற் செல்லவில்லை.

உரையுணா ராதவன் காமமென் னும்முறு வேட்கையால்
வரைபொரு தோளிறச் செற்ற வில்லிமகிழ்ந் தேத்திய
விரைமரு வுங்கடலோத மல்கும்மிரா மேச்சுரத்
தரையர வாடநின் றாடல்பேணு மம்மா னல்லனே

என்னும் சம்பந்தர்செய்யுளின் சொற்றொடர்களைக் கவனிக்குங்கால் இது நன்கு விளங்கும்.

சீதையிடத்தும் இராமனிடத்தும் விளங்கிய தெய்வச் சக்தி இராவணனது வாழ்நாளை ஒழிக்கும் வகையையேவிளைவித்தது. இதுமாத்திரமன்று; அவனிடம் வேறு நற்குணம் தலையெடுத்துக்காட்டி அவனைக் காப்பாற்றவொட்டாமலும் செய்தது. இதைச் சம்பந்தர் இராமேச்சுரப்பதிகத்தினின்றும் அனுமானிக்கலாம்.

தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல் செய்தவி ராமேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கடம் மேல்வினை வீடுமே
(—சம்பந்தர் -)

என்பார் சம்பந்தர். தேவியை வெளவிய தசமுகனைக் கொன்றதால் வரும்பழி யாது? தன்னில்லாளை ஒரு அரக்கன் எடுத்துப்போவானாயின், அவ்வரக்கன் உயிரைப் போக்கினால் உலகவியலில் அது ஒன்றும் பழியாகாது; புகழேதரும். அக்கருத்தைப் பின்வருஞ் செய்யுளில்,

மானனநோக்கியைத்தேவிதன்னைபொருமாயையால்
கானதில் வவ்வியகாரரக்கன்னுயிர்செற்றவன்
ஈனமி லாப்புக ழண்ணல்செய்த விராமேச்சுரம்
ஞானமும் நன்பொரு ளாகின்ற தொருநன்மையே

என்றார்; இராவணனது உயிரைக் கவர்ந்தது பழியென்று முன் இரண்டாம்செய்யுளிலும் அதுஈனமில் புகழென்றிம் மூன்றாம் செய்யுளிலும் சம்பந்தர் மொழியுமிது மாறுகொளக்கூறியதன்று. தேவியைக் கவர்ந்த அரக்கனைக் கொன்றது குற்றமற்ற புகழ்தருஞ் செய்கையாயினும் வைகுண்டநாதன் இராவணனைக்கொல்லற்குப் பெரியபிராட்டியுடன் திருவவதாரஞ்செய்து அவளது அழகால் அவனை மயங்கவைத்துப் பின்னர் அவன் நல்வழிக்குத்திருந்தாமல் மாயையிலாழ்த்திப் போர்செய்து அவனைக் கொன்றவிது, தேவர்பிரானுக்குப் பழிச்செயலன்றோ? ஆயினும் வேறு வழியில்லை. அப்பழி கழிவதற்கே திருவிராமேச்சுரக் கோயிலைத் தாசரதி அமைத்தனர்.

அணையலைசூழ்கடல்அன் றடைத்துவழிசெய்தவன்
பணையிலங் கும்முடி பத்திறுத்தபழி போக்கிய
இணையிலி யென்றமி ருந்தகோ யிலிராமேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதமேத்தத் துயர்நீங்குமே
—சம்பந்தர் - திருவிராமேச்சுரம்-பண் - காந்தாரபஞ்சமம் 6.]

என்னும் சம்பந்தர் திருவாக்கை நோக்குக.

ஆகையால் இராவணன் சீதையைக் கவர்ந்தவிது அவன் குலதருமத்திற்கு விரோதமான காரியமன்று. ஆதலால் தன் மனப்படி ஒரு மனிதஸ்திரீயைத் தூக்கி வருவது இலங்கைக்கும் சம்புத்தீவுக்கும் நாதனாய் நின்ற இராக்கத மன்னவனுக்கு அக்காலத்தில் வெகு குரூரமான செய்கையெனக் கொள்ளலாகாது. அவ்வாறு கொண்டுவந்தஇவன் பலவந்தம்செய்து காமம் நுகர விரும்பவில்லை. சிறையிடப்பட்ட சீதை சோகமற்ற தோட்டத்தில் உலாவும் சுதந்தரத்துடன், வேண்டும் உணவுப்பொருள்கள் அணிகலம் முதலியனவுடன் சூழப்பட்டிருந்தனளே யன்றி, தேகத்தை வருத்தும்படி அவளைக் காவல்செய்த அரக்கிகளுக்கு யாதொரு கட்டளையும் இராவணன் இடவில்லை.

மற்றும் இராவணன், வைகுண்டநாதன் தேவியே தான் கொணர்ந்த சீதையென்று செவ்வனே உணர்ந்திலன். அவன் உயிர்நீங்கும்வரையில், இராமன், இலக்குவன் சீதையிவர்களைச் சாதாரணமனிதர்களென்றே எண்ணியிருந்தான். அது பிழையென இவனுக்குச் சிலர்எடுத்துக் காட்டியும் இவன் உணருஞ் சக்தி அந்நிலையில் பெறவில்லை. ஆகையால் சீதையைக் கவர்ந்தது அறமன்றாயினும், காலம் இடம் குலம் இவைகளை உற்றுநோக்கின் இராவணன்செய்கை பெரும் பாதகமாகக் காணப்படவில்லை. இதன் உண்மையை அப்பர் தமது திருவிராமேச்சுரத் திருப்பதிகத்தில்,

வன்கண்ணர் வாளரக்கர் வாழ்வினையொன் றறியார்
புன்கண்ண ராகிநின்று போர்கள்செய் தாரை மாட்டிச்
செங்கண்மால் செய்த கோயில் திருவிரா மேச்சு ரத்தைத்
தங்கணு லெய்த வல்லார் தாழ்வராந் தலைவன்பாலே.

என்று தம் வாழ்வினையறியாது அரக்கர் போர்செய்ததும் மற்றும்,

வரைகளொத் தேயு யுர்ந்த மணிமுடி யரக்கர் கோனை
விரையழுந் நறவோ டுக்கி மீண்டுமால் செய்த கோயில்
திரைகள்முத் தால்வ ணங்குந் திருவிரா மேச்சுரத்தை
உரைகள்பத் தாலு ரைப்பா ருள்குவா ரன்பி னூலே

என்றும், திருக்கடைக்காப்பில் அவ்வரக்கர்கோனை விரையமுற்று அறவொடுக்கிய திருமால்தன் சக்தியால் செய்தசெய்கையையும் குறிப்பிடுவது காண்க. திருமாலின்சக்தியால் இராவணன்விரையமுற்று ஒடுங்கினுனை கையால்,அவன் தன்சுயேச்சையை(Free will)செலுத்த இவ்விஷயத்தில் சக்தி குறைந்திருந்தான் என்பதும் திண்ணம்.

இவையாவையும் நோக்குங்கால் இராவணன்சீதையை வவ்வியது அவன் ஊழ்வினையின் பயனும், தேவர் வேண்டுகோளுக்கிணங்கத் திருமால்செய்த மாயமும், இராவணன் தவத்தேய்வுமேயாம். அவனது பிறப்பையும் குலவொழுக்கத்தையும் நோக்குழி, பாதகச்செய்கையாய்க் காட்டப்பட்ட இச்செய்கையை இராவணனியற்றியஇது வருந்தத்தக்கதே யாகும். சிவபக்தனுய் வாழ்ந்த இவன் வாழ்நாளிறுதியில் புத்திகெட்டமை கண்டு யாவரும் பரிவுகூர்வார். இவனது வாலாற்றின் முற்பாகம் மறக்கத்கூடியதன்று.

இலங்கை யரக்கர் தமக்கிறையே யிடந்து
கயிலை யெடுக்கிறையே
புலன்கள் கெடவுடன் பாடினனே
பொறிகள் கெடவுடன் பாடினனே
இலங்கிய மேனியி ராவணனே
யெய்து பெயரு மிராவணனே
கலந்தருள் பெற்றது மாவசிமே
காழி யரனடி மாவசிமே.

—சம்பந்தர் - திருக்கழுமலம் - பண்-பழம்பஞ்சுரம்10.

இரவொன்றிற் பல பிழைகள்

[Oliver Goldsmith's—"She Stoops to Conquer"]

[அங்கம் 5—களம் 3.]

(502-வது பக்கத் தொடர்ச்சி)

டோரதி:—நல்லது, நல்லது, போய்விட்டார்களா அவர்கள்! போனுற் போகட்டுமே; எனக்கென்ன.

ஹார்ட்:—யார் போய்விட்டார்?

டோரதி:—தன்கடமை தெரிந்த என் நெவில்லியும் அவள் உத்தம துரை ஹேஸ்ட்டிங்ஸும் - அடக்கமுள்ள விருந்தினர் ஒருவர் நமக்கு வந்தாரே இவர், இவருடைய தோழன்.

ஸார் சார்லஸ்:—யார்! ஹேஸ்ட்டிங்ஸா? உண்மையிலே உத்தமன்தான் அவன்,அவனிலுஞ்சிறந்தவொருவனை இப்பெண் தனக்குத் தேர்ந்துகொண்டிருக்க இயலாது.

ஹார்ட்:—ஆயின், இந்தச் சம்பந்தமும் எனக்குப் பெருமையே அளிக்கின்றதென்பதைக் கருதி மகிழ்கின்றேன்.

டோரதி:—நல்லதுநல்லது, அவர் அந்த மாதரசியை அழைத்துக்கொண்டுபோயிருக்கலாம், ஆனுல் அவள் ஆஸ்த்தியை எடுத்துக்கொண்டு போகவில்லையே. அவளை இழந்த நமக்கு ஆறுதலளிக்க அவள் ஆஸ்த்தியோ நம் குடும்பத்திலேயே தங்கிவிட்டது.

ஹார்ட்:—என்ன டோரதி,இப்படியா பணவாசை பிடித்திருப்பது?

டோரதி:—அது என்விஷயம், உங்கள்விஷயமல்ல. உங்கள் பிள்ளை வயதுவந்த பிறகு நெவில்லியைக் கலியாணஞ் செய்துகொள்ள மறுத்துவிடுவானுனல், அப்புறந்தான் அந்த ஆஸ்த்தி அவளுக்குச்சொந்தமாகி அவளிஷ்டப்படி கையாளலாமென்பது உங்களுக்குத் தெரியுமே; இதுதானல்லவா அவள் தந்தை எழுதிவைத்த உயில்.

ஹார்ட்:—இவனுக்கு இன்னும் வயது வரவில்லையென்றும், இவனுக்கு வயது வந்து அவளைக் கலியாணஞ் செய்துகொள்ள மறுக்கின்ற வரையில் அவள் காத்திருக்க நினைக்கவில்லை யென்றும், அதற்குள் அவள் வேறொருவனை வரித்துவிட்டதால் அந்த ஆஸ்தியத்தனையும் உன்னுடையதாகிவிட்டதென்றும் மகிழ்கின்றாயோ, என்னருமை டோரதி?

[ஹேஸ்ட்டிங்ஸும் நெவில்லியும் வருகின்றனர்.]

டோரதி:-(ஒருபுறமாய்) என்ன! இவ்வளவு விரைவில் திரும்பிவிட்டார்களே! இது என்னுடைய இஷ்டத்திற்கு ஏற்றதாக இருக்கவில்லையே.

ஹேஸ்ட்:—நான், தங்கள் உறவினள் இந்தப் பெண்ணுடன் ஓடிவிட முயன்றபிழைக்கு நான் இப்பொழுது கொள்கின்றகலக்கமே எனக்குத் தண்டனையாகட்டும். உங்கள் நீதியிலும் இரக்கமே வேண்டி மன்ருடத் திரும்பி வந்திருக்கின்ரேம். அவள் தந்தையின் இஷ்டத்திற்கு இணங்கியே என் காதலை இவளுக்குத் தெரிவித்து வேண்டினேன்.எங்கள் இருவர் ஆசையும் முதலில் கடமையையே ஆதாரமாகக் கொண்டு ஆரம்பித்தது.

நெவில்லி:—என் தந்தை இறந்தபின், இந்த அத்தையின் கொடுமைக்குஅஞ்சி அவளைவஞ்சிக்கவேண்டியவளாயினேன். ஒருபொழுது என் அசட்டுத்தனத்தால், என் மனத்திற் கிசைந்தபடி மணப்பதற்காக என்து ஆஸ்த்தியையும் துறந்துவிட ஆயத்தமாயிருந்தேன். ஆயினும் அந்தப் பேதைமையிலிருந்து தெளிந்துவிட்டேன். நெருங்கிய உறவினளாகிய என் அத்தையினிடத்திலிருந்து எனக்குக் கிடைக்காத கருணையை உங்களிடமிருந்து எதிர்ப்பார்த்து நிற்கின்றேன்.

டோரதி:—சீ! சீ! இதெல்லாம், தற்கால நாவல்கள் கடைசியில் இட்டு முடிகின்ற ஊளைகளல்லவோ!

ஹார்ட்:—அது எப்படியாவது இருக்கட்டும். தம் உரிமையைக் கேட்டு வாங்கிக்கொள்ள இவர்கள் திரும்பிவந்திருப்பது எனக்குச் சந்தோஷமே. அப்பா, டோனி, இங்கு வா. இந்தப் பெண்ணை உனக்கு நான் கொடுக்கின்றேன், நீ அவளை ஏற்றுக்கொள்ள மறுக்கத்தானே மறுக்கின்ருய்?

டோனி:—நான் மறுத்து என்ன பயன்? வயது வருகிறவரையில் நான் மறுப்பது செல்லாதென்பது உங்களுக்குத் தெரியுமே.

ஹார்ட்:—உன் தாயார் விருப்பத்தின்படி உனது உண்மையான வயதை நான், அதனுல் உனக்கு நன்மையுண்டென்று எண்ணி ஒளித்துவைத்திருந்தேன். ஆயினும், இப்பொழுது இவள் தனக்குப் பயன்படும்படி தப்பான வழியில் உபயோகப்படுத்திக்கொள்ளப் பார்ப்பதால், விளம்பவேண்டுவது அவசியமாகின்றது —உனக்கு வயதுவந்து மூன்றுமாத மாயிற்று.

டோனி:—வயது வந்தா! அடே யடே! எனக்கு வயது வந்து விட்டதா?

ஹார்ட்:—மூன்றுமாதத்திற்கு மேல் ஆயிற்று.

டோனி:—அப்படியானுல், நான் அடைந்த சுதந்தரத்தை முதல் முதல் எப்படிப் பிரயோஜனப்படுத்துகின்றேன் பாருங்கள்.—இதனுல் சகலமான பேர்களும் அறிய வேண்டுவது என்னவென்ருல், கிறிஸ்தவ குலம் ஆங்கிலேய மதம், பணக்கார ஜாதி, நாட்டுப் புறவாசம், சுக ஜீவனம், 21 வயதுள்ள லம்ப்கின் மகன் டோனி லம்ப்கின் ஆகிய நான், மேல்படி ஜாதி மேல்படி மதம், ஊர் இல்லாதவள், கஷ்ட ஜீவனம், கலியாண மாகாதவள், கான்ஸ்டன்ஸ் நெவில்லியை, என் உண்மையான தர்ம பத்தினியாக ஏற்றுக்கொள்ள மறுக்கின்றேன். மேல்படி நெவில்லியென்பவள் அவளுக்கு இஷ்டமானவனை மணஞ்செய்துகொள்ளலாம். இனி மேல்படி டோனி தன் இச்சைப்படி இருக்கக்கூடிய புருஷனுய்விட்டான்.

ஸர் சார்லஸ்:—இது வல்லவோ பெருந்தன்மை!

ஹேஸ்ட்:—என் அருமை அன்பா!

டோரதி:—அட என் கடனே!

மார்லோ:—என தருமை ஹேஸ்டிங்ஸ், உன் அதிர்ஷ்டத்தைக் கண்டு உவக்கின்றேன்.என்னை இவ்வளவு பாடுபடுத்திவைத்த கொடியவள் இப்பொழுதேனும் இவள் சற்றே இளகுவாளானுல் என்னுடைய அதிர்ஷ்டத்தைக் கண்டு நீயும் உவக்கலாம்.

ஹேஸ்ட்:—(காதெரினைப்பார்த்து) நீ செய்த தந்திரங்களுக்கெல்லாம் மங்களம் பாடவேண்டியவேளை வந்துவிட்டது. எங்கள் கண்குளிரக் கைகோத்து நில்லுங்கள் பார்ப்போம்.

ஹார்ட்:—(காதெரின் கையைப்பிடித்து மார்லோவின் கையில் வைத்து) நானும் அப்படியேசொல்கின்றேன். மார்லோ, இவள் எனக்கு எத்துணை நல்ல மகளாயிருந்தாளோ அத்துணை நல்ல மனைவியாய் உனக்கிருப்பாளாயின் பின் இந்த வியாபாரம் செய்ததற்கு நீ ஒருபோதும் வருந்தமாட்டாய். வாருங்கள், சாப்பிடப்போவோம். நாளைக்கு இவ்வூர் முழுவதையும் விருந்திற்கழைத்து, இவ்வொரு விரவில் விளைந்தஇத்தனை பிழைகளுக்கும் ஒரு திருவிழாக் கொண்டாடுவோம். என்அருமை மருகா, இவளை ஏற்றுக்கொள். இவளை முன் நீ காதலியாகக் கொள்ளப்பார்த்ததில் பிழைசெய்தாய், ஆதலால் மனைவியாய்க் கொண்டபின் ஒருபோதும் இனிப் பிழை நீ செய்யமாட்டாய் என்று நம்புகிறேன்.

நாடகம் முற்றிற்று.

காலம்

[504-வது பக்கத் தொடர்ச்சி]

யாண்டு.

இனி, யாண்டு என்பது என்னை யெனின், இராசி மண்டலத்தினுள்ள பன்னிரண்டு ராசிகளினு மொரு முறை கதிரவன் ஒரு வட்டம் வருவானுயின், அல்லது கதிரவன் நிரக்ஷரேகையின் தெற்கே செல்லுந் தக்ஷிணுயனமும் வடக்கே செல்லு முத்திராயணமுங் கூடியவொரு காலப்பகுதி கடக்குமாயின், அல்லது கார்முதலிய பவருங்களாறும் ஒருமுறை வரிசையே கடந்தனவாயின், அதனை யாண்டென்று குறித்து வழங்கினர். அதனை இக்காலத்தில் வருஷம் ஆண்டு என்ற பெயர்களால் வழங்குகின்றனர். பண்டைக் காலவழக்கில் யாண்டு அல்லது ஆண்டு என்பனவே உள்ளன. இவ்விரண்டனுள்ளும் யாண்டு என்பதே மிகத் தொன்மையதாகும். "வேண்டிய கல்வி யாண்டு மூன் றிறவாது" என்றும் (தொல்காப்பியம். கற்பு. 188). வேந்துறு தொழிலே யாண்டின தகமே (ஷை. ஷை. 189) என்றும் வருவன போன்ற பிரயோகங்களைக் காண்க. இவ்யாண்டென்னு மொழியே பிற்காலத்தில்ஆண்டென்றுமருவிவழங்கிவரலாயிற்று. இவ்விதமே,பார்-ஆர் என்றும், யாறு-ஆறுஎன்றும், யானை-ஆனையென்றும், யாடு - ஆடு என்றும், மருவி வந்தன காண்க. யாண்டென்பதற்கு இடத்தின்மேல் நிகழும் ஐயம், வருஷம், என்றிரண்டு பொருள்களுள. இவ்விரண்டனுள்ளும் வருடமென்னும் பொருளுணர்த்துமிடத்துக் காரணக் குறியென்றே கருதற் கிடமுண்டு. என்னையெனின், மக்களின் வாழ்க்கை யரும்புங்காலமாவது அவ் வில்லறம் மேற்கொள்ளுங் காலமேயன்ரே:—அவ்வில்லறத்தவனே இயல்புடைய மற்றை மூவருக்கும் நல்லாற்றின் நின்ற துணையாகின்ருன்— "அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை" என்று உயர்த்திக்கூறு மேற்றமுடையதில்வாழ்க்கையே,ஆதலின் இல்வாழ்க்கை மக்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் இணையற்றதோர் நல்லறச் செயலாகின்றது. அதனை இனிது நடத்துவது காதன் மனையாளுங் காதலனுங் கருத்தொருமித்த பின்பே கைகூடுமாதலினுல் அத்தகையநிலையைப் பெறுவதற்கு மாந்தர் முதன்முதலாக முயற்சிப்பது யாண்டோ - எக் கார்காலத்திலோ அக்காலந் தொடங்கியதோர் காலப்பகுதியினையும் யாண்டென்றே வழங்கினர்போலும். யாண்டென்ப திப்பொழுது பெருவழக்கின தன்றேனும் யாண்டென்பது கொல்லம் முதலிய சோநாட்டி லிப்பொழுதும் வழங்கிவருகின்றது.

இக்காலப்பகுதிதனைஉணர்த்துதற்குரியமொழிகள் வடமொழியிலே பலவுள. அவை 'வர்ஷம்' 'சரத்' 'ஸம்வத்ஸரம்' 'அப்தம்' முதலியனவாம். இவ்வடமொழிகள், வர்ஷ - மழை; அதனையுடையது வர்ஷம்;

ச்ரு - வருத்தல்; பனியினுல் வருத்துவது சரத்; அப்-நீர்; அதனைத் தருவது அப்தம்; என்றிவ்வகைஇய காரணங் குறித்தனவேயாம். இப்பெயர்களுள் வர்ஷம், சரத் தென்றவிரண்டும் ஒரு பருவத்திற்கும் யாண்டிற்கும் பெயராகின்றன. (வர்ஷரிது - கார்ப்பருவம்; வர்ஷம் - யாண்டு. சரதரிது - கூதிர்ப் பருவம், சரத்-வருஷம்) மற்றைய வஸந்தம் முதலிய பருவப் பெயர்களுக் கித்தன்மை இலது. இவ்வியல்பினையும் தமிழர்கள் கார்முதலாகப் பருவங்களைமொழிந்திருப்பதையுங் காண ஓர் ஐயப்பாடு மனத்தே நிகழ்கின்றது.

இக்காலத்து நாம் வருஷாரம்பமாகக் கொள்ளுஞ் சித்திரையே அக்காலத்தும் முதலாக விருக்குமாயின் இளவேனிலன்றோ முற்கூறப்படுதல் வேண்டும். அஃதின்றிக் கார்முதல் ஏன் கழறுகின்றனர். வடமொழியினுங் கார்ப்பருவத்தின் பெயரே யாண்டிற்கும் பெயராக வமைதற்குக் காரணமென்னை? வஸந்தத்திற்கு இல்லாத சிறப்பு வர்ஷத்திற்கு யாதுளது? ஆங்கிலேயர்களும் குளிர்(Winter) காலத்திலேன் யாண்டைத் தொடங்குகின்றனர்? இவையனைத்துங் காண்பார்க்குப் பண்டைப் பாகுபாட்டினின்றுந் தற்காலத்துப் பாகுபாடு ஒருமாறுதலைப் பெற்றிருக்கின்ற தென்றே தோன்றும்.

இப்பொழுது நாம் சித்திரை என்பது கதிரவன் மேடவிராசியிலிருக்குங் காலமே ஆதலால் அம்மேடத்திலவன் முதன்முதற் செல்லுங் காலத்தையே சித்திரவிஷு என்கின்றோம். அதனையே யாண்டின் முதலாகவுங் கொள்கின்றோம். இவ்வாறு கணிப்பது சௌரமானக் கணக்காகும். வேறு சிலர் பங்குனி யுவா நாளின் அடுத்தநாளையே சித்திரையின் ஆரம்ப மென்கின்றனர். அதனையே யுகாதி யென்றும் வருஷாதி யென்றுங் கொண்டாடுவர். இவர் கணக்கிடுவது சாந்திரமான முறையாகும். இவர் கொள்ளும் முறையிற் சந்திரனு மந்தநட்சத்திரமுங் கூடுகின்ற வொரு சிறப்பே பற்றி மாதப்பெயர் அமைத்த ஒருண்மை யுளதேனும் வருஷக்கணக்கில் முற்கூறியதோ ரிடர்ப்பாடு தோன்றவே சௌரமானத்தையுந் தழுவிக்கொண்டிருத்தல் வேண்டும். நம் முன்னோர்கள் கதிரவனது கதிநோக்கி யாண்டுக் கணக்கிடவே அவன் இராசிமண்டலத்தை வட்டமிடுங் காலமாகிய சற்றேறக் குறைய முன்னூற்றறுபத்தைந்து நாட்களை யோர் யாண்டென்று மதித்தமையினுல், இவ்வளவினதான சில வருஷங்களைக் கடந்து செல்லும்போது வருஷந்தோறுஞ் சில நாட்களாகவும் சிற்சில வருஷங்கள் சென்றபின் சில மாதங்களாகவும் அதிகப்பட்டுத் தோன்றின. அதிக மாதமாகும்போது அதனை அதிக மாதமென்று கழித்துவிட்டுச் சௌரமானத்தையுந் தழுவிக்கொண்டு இருவரும் ஏறத்தாழ வொருதிறப்பட்டனர். மற்று, சாந்திரமானத்தையேமுழுவகையிலுங்கைக்கொண்டுள்ள மகம்மதியர்முதலிய வொருசிலர் நம்மினும் வேறுபடுவது மலையிலக்கே. மோகரம் என்பது ஒருமாதத்தின் பெயரே. அம்மாதத்திற் கொண்டாடப்படும் அவரது விழா நமது கணக்கின்படியே நம்முடையவொரு மாதத்திலேயே வருவது இன்றி வேறுபட்டு வருவதை வருடந்தோறும் நாம் காண்கின்றோம். ஆகவே அவர்க்கு யாண்டுக் கணக்கில் மிகுதியும் வேறுபாடு தோன்றவே அவர் ஆட்சிபெற்றிருந்த காலத்தில் தகுந்த நூலாராய்ச்சி யுடையாரைக் கொண்டு சீர்திருத்தஞ்செய்து கொண்டனர். அச் சீர்திருத்தத்தின் அடையாளமே இப்பொழுது செய்கின்ற பஸலிக் கணக்காகும்.

இச்சாந்திரசௌரமானங்களே யன்றி வியாழனது கதியைநோக்கிக் கணிக்கின்ற பார்ஹஸ்பத்தியமானம் என்ற மற்றொரு கணக்கும் வடநாட்டில் உளது. விந்தியத்திற்கு வடக்கிலுள்ளார் வியாழனைக் கொண்டு காலத்தைக் கணக்கிடுகின்றன ரென்பதைச் சோதிடநூலோருரையானு முணரலாம். அகத்தியர் விந்தியத்தின் செருக்கை யடக்கிய செய்தியும் இதனை உறுதிப் படுத்தும். வியாழன் இராசி மண்டலத்தை யொருமுறை வட்டமிடப் பன்னிரண்டு வருடம் ஆகும். ஆகவே, ஒவ்வொருஇராசியிலும் அவனிருக்குங்காலத்தை யொவ்வோர் யாண்டாக அன்னவர் கணித்துக் கொண்டனர் போலும். ஆங்கிலேயர் ஒருவருடத்திற்கித்தனை நாளெனவும் ஒவ்வொரு மாதத்திற்கு மித்தனையே நாளெனவும் முடிவுகட்டிவிடுகின்றனர். அவர்கள் வருஷத்திற்கு $365\frac{1}{4}$ நாளெனக் கொண்டு $\frac{1}{4}$ நாளைக் கழித்து 365 நாட்களை 12 மாதங்களுக்கும் பங்கிட்டிருக்கின்றனர். நான்கு வருடத்திற் கொருமுறை கால்காலாகக் கூடிய ஒரு நாளையும் சேர்த்து 366 ஆகக் கணக்கிட்டனர். அதுவே லீப் வருஷம் எனப்படும். அவ்வருடத்தில் பிப்ரவரிக்குத் தேதி 29 ஆகும். ஆகவே, ஞாயிறு திங்கள் வியாழன் இவர்களை யெதிர்பார்க்க வேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை.

நாம் சித்திரையை வருஷாரம்பமாகக் கொள்வது போலவே கொல்லம் ஆண்டு நமது ஆவணி முதல் ஆரம்பிக்கின்றது. வடநாட்டுவணிகர்களோ தீபாவளியிற் புதுக்கணக்கிடுகின்றனர். மகமதியர்களின் பஸலியோ ஜூலை முதல்தேதியிலிருந்து ஆரம்பமாகின்றது. இப்பொழுதைய வரசாட்சியிலுங் கூட அரசாங்க வருஷம் (Official year) ஏப்ரல் முதலாகத் தொடங்குகின்றது. ஆங்கிலேயரோ குளிர்காலத்தில்(winter) அதாவது நமது மார்கழியில் வருகின்ற ஜனவரியிலிருந்து வருஷஆரம்பஞ் செய்கின்றனர். இம்மாறுதல்களையுந் தமிழில் கார்ப்பருவம் முதலாகப் பருவங்களைக் கூறுவதையு மொன்றுசேர்த்து உன்னுமிடத்து ஒருமுடிவுந் தோன்றுகின்றது. இப்பொழுது வழக்கிலிருப்பதுபோலவே யாண்டு சித்திரையினிடமிருந்து தோன்றாத காலமொன்றுண்டு. ஒருகாலத்தில் அது கார்ப்பருவத்திலிருந்தே தோன்றியிருக்கவேண்டுமென்பதாய இம்முடிவினைத் தொல்காப்பியத்தினுலும் அதற்குஉரைசெய்த நச்சினர்க்கினியர் முதலானோருரையானும் பண்டைத்தமி ழிலக்கண விலக்கியங்களானுணரப்படுந்தமிழ்வழக்கினுலும் வடமொழியிலுள்ள சிலகுறிப்புக்களானும் பிறவற்றுனு மொருவாறு நாம் காணலாம்.

இரவீந்திரநாதர் கட்டுரைகள்

தபோவனம்

[5-4-வது பக்கத் தொடர்ச்சி]

பார்வதீதேவி, மன்மதனைக்கொண்டு சிவபிரானை அடைய முயன்றது வீணுயிற்று; இறுதியில் அவள் சிவபிரானை அடைந்தது துறவின் உதவியைக்கொண்டே. முழுமையைக் காணமாட்டாக் குருட்டுத்தனத்தினுல் அதனை வஞ்சித்து ஒரு பாகத்தின்மீது கொள்ளும் வாஞ்சையே காமம் எனப்படும். ஆதலான் இக்காமத்தால் சிவபிரானை எங்ஙனம் அடைய இயலும். ஏனெனில், எக்காலம் எத்தேசம் யாவற்றிற்கும்உரியவன் அவன். இப்படி அனைத்தும் தானுய இம்முழுமுதற்பொருளை, காமத்தை ஒழித்தாலன்றி, ஒருபோதும் அடைதலோ இயலாது. "தேன தக்தேன புஞ்சிதம்"- துறவின் மூலம் வாழ்வை அனுபவிப்பாய்—இதுவே உபநிடதத்தின் குறிக்கோள், இதுவே குமாரஸம்பவ காவியத்தின் மூலப்பொருள்; மற்று, இதுவேதான்நம் தபோவனத்தின் சாதனை—துறவின்மூலமாகவே ஒருவன் தன்னை அறிந்துகொள்கின்றுன்.

அன்ன அறிவிற்குரிய இரண்டு மகத்தான பாதைகளாக, தியாகமும், தன் துயரைப்பொறுத்தலும், நமது தருமசாஸ்திரங்களில் சிறப்பாகப் பாராட்டப்பெற்றிருப்பதைக் காண்கின்றோம். இந்த ஜகத்தில் நடைபெறுகின்ற சிருஷ்டித்தொழில்களுக்குச் சூரியவெப்பம் இன்றியமையாததாயிருப்பதுபோலவே, ஜீவனது யாத்திரை நிறைவேறுவதற்குத் 'தூக்கம்' என்பதும் மிகவும் அவசியமான வொரு இரஸாயன சக்தியாக அமைகின்றது. இந்தச் சக்தியினுல், மனிதனது சித்தத்தில்இறங்கியிருந்த கெட்டஎண்ணங்களெல்லாம்உருகிவிடுகின்றன. அதனுல் அவன், தனது இதயத்தில் கலந்துகிடந்த அசத்தியங்களை அறிந்தவனுகின்றுன். தூக்கத்தின் தன்மை இன்னதாகையால், ஸம்ஸாரத்தின் துக்கங்களை அத்துக்கத்திற்குரிய ஒருஉருவத்துடனே பொறுமையுட னனுபவித்திருக்கின்றவன் உண்மையாய தவசி எனத்தகுந்தவ னுகின்றுன். (உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண்செய்யாமை, அற்றே தவத்திற் குரு, என்ற திருவள்ளுவர் வாக்கு இங்கு ஒப்பு நோக்குதற்குரியது.)

ஆயினுமொன்று அவசியம். இப்படித் துக்கத்தை அனுபவிக்கவேண்டுமென்பதே உபநிடதங்களின் இலக்ஷியமாமென்று ஒருவரும் எண்ணிவிடல் ஆகாது. தாம் பொறுத்துத்தீரவேண்டிய ஒரு துக்கமே என்று துறவைஏற்றுக்கொள்வதின்றி அத்துறவினை ஒருபோகமாகவே வரித்துக் கொண்டாடவேண்டும் என்பது உபநிடதத்தின் உட்கோள். உபநிடதத்தில் கூறப்பட்டிருக்குந் துறவு பூரணத்தை அடைவிக்குந் துறவாம்; அதுவே ஆழ்ந்த ஆனந்தத்தை எய்துவிப்பது; நிகிலத்துடன் ஒற்றுமைப் படுத்துவது; பிரபஞ்சத்துடன் இணைத்துவைப்பது; ஆதலின் இந்தப்பாரதநாட்டின் குறிக்கோள் தபோவனமாகவே நின்றது. சரீரத்திற்கு விரோதமாகஆன்மாவும் ஸம்ஸாரத்திற்குவிரோதமாக ஸந்நியாசமும்ஓயாமல்கைகலந்துபோர்செய்துகொண்டிருக்குமொருயுத்தகளமன்று இத்தபோவனம். துறவின்மூலமே ஜீவகோடிகளனைத்தும் முழுமுதற்பொருளுடன் ஐக்கியமாகின்றது. இதுவே தவவனத்தின் சாதனை. இக்காரணத்தாற்றுனிப்பாரதநாடு புல்பூண்டு பறவைகள்விலங்குகள் முதலிய அனைத்துடனும் ஒருகுலத்தினர்போல் நெருங்கிய உறவுகொண்டிருக்கின்றது. இந்த நுட்பத்தை யறியாத அயல்நாட்டவர்க்கு இச்செய்திபெரியதோர் பேதைமைபோல்தோன்றும்.

நம் நாட்டின் காவியங்களில், பிரகிருதியுடன் கொண்டிருக்கும் இந்த நேயம் எங்கும் பொலிகின்றது. ஏனைய தேயங்களின்காவியங்களில், பிரகிருதியானது தனியான வேறோர் பொருளேபோல் பாவிக்கப்படுவதால், அந்தப் பிரகிருதியின் வனப்பானது மனிதரது மனத்திற்குக் களிப்பை நல்கவல்ல பல சாதனங்களிலொன்றுகத் தீர்கின்றது. பாரதநாட்டில் மனிதரும் பிரகிருதியும் பூண்டிருக்கின்ற தொடர்பு அத்தகையதன்று. இவையிரண்டும்இங்கு ஒன்றினுள் ளொன்றுமூழ்கி முழுமையாய்த் திகழ்கின்றன. ஆயினும், நகரின் நாகரிகம் இன்னதென்பதே அறியாதாராகி எப்பொழுதும் வனத்திலேயே வசிக்கின்ற 'காட்டுமிராண்டிகள்' பிரகிருதியோடுநெருங்கிப்பயின்று தம் வாழ்க்கையை நடத்துகின்றாரானுலும், திருந்தாத ஒழுக்கமுடைய அவரது உறவினை, நம் தபோவனச் சாதனையாகிய பிரகிருதி சம்பந்தம் எவ்வகையினும் ஒத்திருக்கின்றதென்று எண்ணிவிடலாகாது. ஆப்பிரிக்காக் கண்டத்துப் பெருங் காடுகள் அல்ல நம்தபோவனங்கள். அக்காட்டுமிராண்டிகளின் வாழ்க்கை தமோகுணத்தால் செலுத்தப்படுவது; அவருக்கும் அவரைச்சூழ்ந்திருக்கின்ற பிரகிருதிக்கும் உள்ள தொடர்பு அத் தமோகுணத்தொடர்பே. நம் தவவன வாசிகள் தெளிந்த சிந்தையால் மெய்யுணர்வு பெற்றவர். இத்தகையவர் பிரகிருதியுடன் கொள்கின்ற உறவானது, தொன்றுதொட்டு வழிவழிசெய்துவருகின்ற சடங்குகளேபோல் பொருளற்றதாக நடைபெறுதலியலாது. மனிதர்தாமாகவேவலிந்துவற்புறுத்திவந்த தடைகள் நீங்கும்போதுஏற்படும்இயற்கையுறவுபோன்றதன்றோ தவவனத்தில் பிரகிருதியுடன் சாதிக்கப்பெற்ற இவ்வுறவு.

ஏனெனில், நம் கவிகள் கூறியிருக்கின்றவண்ணம், தவவனமானது சத்துவகுணத்தால் சிறக்கின்றவோர் இடமாம். இச் சத்துவகுணமும் அதன் சாரமாகிய சாந்தமும், என்றென்றும் பின்னப்படாமல் ஏகமாய் நிற்கின்ற ஒரு முழுப்பொருளின் குணமும் சாரமும் ஆகும். ஏழு நிறங்களும் தனித்தனி பிரியாமல் ஒன்றுகக் குவியும்போது வெண்மைநிறந் தோன்றுவதுபோலவே, சித்தத்தின் பிரவாகமானது நாலுபக்கங்களில் பிரிந்து பாயாமல் நிகிலத்துடனே ஒற்றுமைகொண்டு தனது அந்தரங்கமான மெய்ம்மையால் தன்னைச் சம்பூரணமாக நிறைத்துக்கொள்கின்றபோது சாந்தரஸந் தோன்றலாகின்றது. அந்தச் சாந்தரஸத்தின் உருவம் தபோவனம். அங்குச் சித்தமானது, நெருப்பு காற்று நீர் நிலம் ஆகாயம், புல் பூண்டு பறவை விலங்கு, ஆகிய அனைத்துடனும்பூரணமானசம்பந்தத்தைக் கொண்டிருக்கின்றது. அங்குத் தன்னைச் சூழ்ந்திருக்கும் எதனுடனு மனிதனுக்கு வேற்றுமையுமில்லை, விரோதமுமில்லை.

பாரதநாட்டில் இத்தகைய சாந்தரஸத்தின் சங்கீதம் இயற்றப்பெற்றபுனிதபூமி தபோவனமாம். நமது தேசயத்தில் இன்று பாடப்பெறும் இராக இராகிணிகள் அனைத்தும்அந்தவொருசங்கீதத்தின்சிறப்புடைய சாதனைகளே. ஆகையாற்றுன், நம் காவியங்களில், மனிதரோடு பிரகிருதிக்கும் அத்துணைச் சிறப்பானவோர் இடம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மனிதர்களுக்குள் சம்பூரணமடையவேண்டுமென்று ... ஒரு ஆர்வம் நிறைவேறும்பொரு... தழைத்தன என்னலாம்.

193183
m 211, N28KN

சமுத்ர சரணாகதி

ஸ்ரீராமபிரான் விபீஷணாழ்வானுடைய வார்த்தையைக் கேட்டு ஸமுத்ர ராஜனை நோக்கிச் சரணாகதி பண்ணினானென்பதை வெளியிட்ட வால்மீகி மஹரிஷியும் கம்பரும், ஸ்ரீராமபிரானையும் ஒரு கடலாகப் பேசினார்கள். "அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதி சிச்யே மஹோததே:" என்பது வால்மீகி மாமுனிவரின் வாக்கு. இதில் ப்ரதிசிச்யே என்றதனால், அந்தக் கடலை நோக்கி மற்றொரு கடல் எதிரே பள்ளிகொண்டதுபோலும் என்பதாகக் கருத்துத் தொனிக்கின்றதென்று மஹான்கள் வியாக்கியானம் செய்தார்கள். கம்பரும் வருணனை வழிவேண்டு படலத்தில் "கருணையங் கடல் கிடந்தனன் கருங்கடல் நோக்கி" என்றார். திருவாய் மொழியில் 6-9-3 பாசுரத்தின் நம்பிள்ளை யீட்டிலும் "ஒரு கடல் ஒரு கடலோடே ஸ்பர்த்தித்துக் கிடந்தாப்போலே யிருக்கை" என்றருளிச் செய்யப்பட்டது. வேதாந்த தேசிகனும் ரகுவீரகத்யத்தில் "ப்ரதிசயந பூமிகா பூஷித பயோதி புளிந" என்றார். ஆக இப்படிப்பட்ட முன்னோர் மொழிகளுக்கு இணங்க எம்பெருமானுக்கும் கடலுக்குமுள்ள ஒற்றுமை நயத்தைக் கருதுவோர் உள்ளத்தில் ஆனந்தம் பெருகும். அவைகளிற் சில ஈண்டுச் சுருக்கமாகக் குறிக்கப்பெறுக்கின்றன:—

1. பெரிய திருமொழியில் (2-8-5) "நீண்ட மலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற, அலை கடல் போன்றிவரார்" என்ற பாசுரத்தில் திருமங்கையாழ்வார் தாமே பகவானுக்கு ஸமுத்ர ஸாம்யத்தை ஒருவாறு அருளிச்செய்தார். கடலானது மைநாகம் முதலிய மலைகளையுடையது; எம்பெருமான் "ஈரிரண்டு மால் வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமால்" என்கிறபடியே மலைபோன்ற திருத்தோள்களையுடையவன். "நகுகதிர் வழங்கு தகடுபடு செம்பொன் நவமணி குயின்ற தொடியணிந்த ககன வில்லிடு நீல வெற்போத்து இருந்தன" என்றார் பிள்ளைபெருமாளையங்காரும். கடல் சிறந்த நவமணிகளையுமுடையது; எம்பெருமான், குருமாமணிப்பூண் என்கிற கௌஸ்துப மணியையும், செங்கமலக் கழலில் சிற்றிதழ்போல் விரலில்சேர் திகழாழிகளுங் கிண்கிணியும் அரையில் தங்கிய பொன்வடமும் தாள நன்மாதுளையின் பூவொடு பொன்மணியும் மோதிரமுங் கிறியும் மங்கல வைம்படையுந் தோள் வளையுங் குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும்" என்னும்படியான திவ்யாபரண மணிகளையுமுடையவன். கடலானது லக்ஷ்மீப்ரஸூதி க்ருஹ மாகையாலே பெரிய பிராட்டியாருக்கு உறைவிடம்; எம்பெருமான் அகலகில்லே னிறையு மென்று அலர்மேல் மங்கையுறைமார்பன். கடல் சங்குதங்குமிடம்; எம்பெருமானும் வெள்ளைச் சுரிசங்கு ஏந்துமவன். "மத்யமாநசலபேநில ஸிந்து..." இத்யாதி வரதராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும், "ஹாரஸ்பாரிதபேநம் அம்சுலஹரீமாலர்த்தி முக்தாபல ச்ரேணீ சீகரதுர்த்திநம் தத இதோ வ்யாகீர்ண ரத்நோத்கரம், ஆவி: கௌஸ்துபலக்ஷ்மி ரங்க வஸதேர் நிஸ்ஸீம பூமாத்புதம் வக்ஷோ மந்தரமத்யமாந ஜலதிச்லாகம் விலோகேமஹி," என்கிற ஸ்ரீரங்க ராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும் இங்கு ஸ்மரிக்கத்தகும்.

2. கடல் முன்னீர் என்று பெயர் பெற்றிருக்கிறது, எல்லாவற்றுக்கும் முன்னே ஏற்பட்ட நீர் என்பது பொருள். 'அப ஏவ ஸஸர்ஜ ஆதௌ" என்று மஹரிஷிகளும் "நன்மைப் புனல் பண்ணி" என்று ஆழ்வார்களும் கூறினது காண்க. இங்கே கடல் முதன்மை பெற்றிருப்பது போல எம்பெருமானும் "முனைவன் மூவுலகாளி யப்பன்" என்னும்படியே ஆதிபகவனாயிருப்பன்.

3. கடல் முன்னீர் என்பதல்லாமல் முந்நீர் எனப்படுவதுமுண்டு; [நிகண்டு ரத்தில் வாசி காண்க.] ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னப்படுகிற மூன்று வகைப்பட்ட நீரையுடையது கடல் என்றபடி. எம்பெருமானும் நீர்போன்ற கருணாரஸம் மூன்று வகையாக இருக்கப்பெற்றவன்; (1) இயற்கையான இன்னருள், (2) பிறர்படுந் துயரத்தைக்கண்டு தோன்றுகின்ற அருள், (3) பிராட்டியின் புருஷகாரத்தாலே தோற்றுவிக்கப்பட்ட அருள் என மூவகைப்படும் பகவானது கருணாரஸம்.

4. கடல் சிறுமீன் முதலாகத் திமிங்கிலம் வரையிலும், கிளிஞ்சல் முதலாக மணி மாணிக்கம் வரையிலும் அதம உத்தம விபாகமில்லாமல் அனைத்துக்கும் தன்பக்கலிலே இடங்கொடுத்திருக்கும். எம்பெருமானும் "சிவனொடு பிரமன் வண் திருமடந்தைசேர் திருவாகம்", "ஏறாளு மிறையோனுந் திசைமுகனுந் திருமகளும், கூறாளுந் தனியுடம்பன்" "பச்யாமி தேவாந் தவ தேவ தேஹே" இத்யாதிப்படியே ஸர்வாபாச்ரயமா யிருப்பன்.

5. கடல் தேவர்களுக்குச் சாவாமருந்தான அமுதத்தைச் சுரந்தளித்தது. எம்பெருமானும் "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்," "தன்னைப் பெற்றேற்குத் தன்வாயமுதம் தந்து என்னைத்தளிர்ப்பிக்கின்றான்" என்னும்படியே பேரன்புடையார்க்குச் சாவாமருந்தான வாயமுதத்தை யளிக்குமவன்.

6. கடல் அளவிடமுடியாத ஆழத்தையுடையது; "ஸமுத்ர இவ காம்பீர்யே" என்கிறபடியே எம்பெருமானது கம்பீரத் தன்மையும் பாசுரமிட்டுப் பேசவொண்ணாதது. கொள்ளமாளா வின்பவெள்ளமாகையாலே இதிலே யிழிவார்க்கு உள்ளாழம் காண்பரிது.

7. கடல் தன்பக்கல் உள்ளதை மேகங்களுக்குக் கொடுப்பதுஞ் செய்யும்; மேகம் பெய்யும் நீரைத் தான் வாங்கிக்கொள்வதுஞ் செய்யும். எம்பெருமானும் "அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதம்" "ஸகல பலப்ரதோ ஹி விஷ்ணு:" என்கிறபடியே கொடுக்கவும் வல்லன்" "கரோமி யத் யத் ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயாமி" என்றுகொடுப்பார் கொடுப்பவற்றைக் கொள்ளவும் வல்லன்.

8. கடல், மழைநீர் தன்னிடத்து விழப்பெற்றாலும் அதனால் ஒரு அதிசயமும் உண்டாகப் பெறாது; "வர்ஷபிந்தோ ரிவ அப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்மலாபோ ந து கபளநத:" என்கிறபடியே பெய்யும் முகிலுக்கு ஆத்மலாபமே யத்தனை. அவ்வாறே, எம்பெருமானுக்கு நாம் எவ்வளவு சமர்ப்பித்தாலும் அதனால் நாம் க்ருதார்த்தர்களாவது தவிரப் பகவானுக்குப் புதிதாகச் செல்வநிறைவு ஒன்றுமில்லை.

9. கடல்நீர் நம்போல்வார் வாயில் புகமாட்டாது கசக்கும்; ஆனபோதிலும் "ஆசாந்தவஸிந்தோ: கும்பஸம்போ:" என்கின்றபடியே குறுமுனிவனுக்கு உணவாயிற்று. எம்பெருமானும் "தோன்றல் வாளரக்கன் கெடத் தோன்றின நஞ்சினை" என்கின்றபடியே நம்போல்வாரான ஆஸுரப்ரக்கிருதிகளுக்கு விஷமாயிருந்தாலும் சுவையறிவார்க்கு "அமுதினு மாற்ற வினியன்", "எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ் சோலைக் கோனே யாகி" என்னும்படி பரமபோக்யனாவான்.

10. கடல் அஞ்சினார்க்குப் புகலிடமாயிருக்கும்; இந்திரனிடத்து அஞ்சின மைநாககிரி முதலியவற்றிற்குப் புகலிடமாயிருந்ததே. எம்பெருமானுக்கு இத்தன்மை ஸ்வபாவஸித்தம். "அஞ்சினேற்கு அஞ்சலென்று காவிபோல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றினாரே", "ஆர்த்தத்ராண பராயணஸ் ஸ பகவாந் நாராயணோ மே கதி:" இத்யாதி.

11. கடல்நீர் மாமுகிலின் வாய்வழியாக வந்தாலன்றி ஆர்க்கும் உபஜீவிக்க வொண்ணாது; எம்பெருமானும் ஆழ்வார்ஆசார்யர்களின் திருவாய் வழியாக வந்தாலேயன்றி உபஜீவிக்கலாகாள். இவ்விடத்தில், லக்ஷ்மீநாதாச்ய ஸிந்தௌ சடரிபு ஜலத: ப்ராப்ய காருண்ய நீரம் நாதாத்ரௌ அப்யஷிஞ்சத்" என்கிற ச்லோகத்தையும் "மேகம் பருகின ஸமுத்ராம்புபோலே நாற்கடற்சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸர்வோப ஜீவ்ய மாமே" என்கிற ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தியின் சீரிய பொருளையும் நோக்குக.

12. கடல் பெரும்பாலும் குளிர்ச்சி மிக்கிருக்கச் செய்தேயும் ஒரு புறத்தில் பாடபாக்நி பொங்கநிற்கும். எம்பெருமானும் தண்ணளியே வடிவாயிருக்கச் செய்தேயும் "நீரிலே நெருப்புக் கிளருமாபோலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறக்க" வெவ்வியனாயிருப்பதுமுண்டிறே.

13. கடல் சந்திரனைக் கண்டால் பொங்கிக்கிளரும்; எம்பெருமானும் ஞானிகளைக் கண்டக்கால் "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க்கண்களாயிரத்தாய், தாள்களாயிரத்தாய்" என்னும்படி சத சாகமாகப் பணைப்பன்.

14. நாமெல்லாரும் கடலின் கரையிலேதான் நிற்கவேண்டுமே யல்லது உள்ளே புக முடியாது; சிலவர்களே உட்புகுந்து ரத்னங்களைத் திரட்டிக் கொணர்வர்கள். அதுபோலே பகவத்விஷயத்திலே நாமெல்லாம் மேலெழநிற்க, சில மஹான்களே ஆழ அவகாஹித்து வேதார்த்த ரத்னநிதிகளை வாரிக்கொணர்ந்து கொடுப்பார்கள்.

15. கடல் விஷத்தையும் தந்தது, அமுதத்தையுமளித்தது. எம்பெருமானும் பயக்ருத்பநாசந: என்கிறபடியே பயத்தையும் விளைவிப்பான், பய நாசமும் பண்ணித்தருவான். "நல்குரவுஞ்செல்வமும் நரகும் சுவர்க்கமுமாய், வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்" என்றார் நம்மாழ்வாரும். "பவ மோக்ஷணயோஸ் த்வயைவ ஜந்து: க்ரியதே ரங்கநிதே!" என்றார் பட்டரும்.

16. கடல் எத்தனை தடவை பார்க்கப்பட்டாலும் த்ருப்தி தரமாட்டாது; காணுந்தோறும் அபூர்வ தர்சநமாகவே யிருக்கும். எம்பெருமான்படியு மப்படியே; "எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டூழி யூழிதொறும், அப்பொழுதைக் கப்பொழுதென் னாராவமுதமே" என்றார் நம்மாழ்வார்.

17. கடலுக்கு ஒரு பக்கத்தில் வரவுகளும் ஒரு பக்கத்தில் செலவுகளுமா யிருக்கும்; [பல நதிகள் வந்து சேர்வது வரவு; மேகம் நீர் முகந்து கொண்டு போவது செலவு.] எம்பெருமானுக்கும் அர்ச்சாவதாரங்களில் இங்ஙனேயா யிருக்கும். திருவேங்கடமுடையான் ஸந்நிதி போன்ற ஆலயங்களில் உண்டியில் வரவு முண்டு; பலவகைச் செலவுமுண்டு.

18. கடல்வழியே போவார்க்குப் பெருஞ்செல்வம் கிடைக்கும்; "திரைகட லோடியும் திரவியம் தேடு" என்றார்கள். அநுபவத்திலும் இது காணாநின்றோம்; இவ்வண்ணமே எப்பெருமான் வழியே போவார்க்கு மஹார்த்தங்கள் கிடைக்கப்பெறும்; "நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் றன்னையே தான் வேண்டுஞ் செல்வம்" என்றார் குலசேகரப்பெருமாள்.

19. "அப்திர் லங்கித ஏவ வாநரபடை: கிந்து அஸ்ய கம்பீரதாம் ஆபாதாள நிமக்நபீவரதநுர் ஜாநாதி மந்தாசல:" (முராரி) என்கிறபடியே வீரர்கள் பலர் கடலைக் கடந்துவிட்டாலும் அவர்களுக்கு உள்ளாழம் தெரியாது; அடிவரையில் அழுந்தின மந்தரகிரிக்கே அந்த ஆழம் தெரியும்; அதுபோலவே, எம்பெருமான் விஷயத்தில் நாமெல்லோரும் கவிகள் இயற்றித் துதி செய்துவிட்டாலும் அவன் படிகளை நாம் சிறிதுகூட அறியமாட்டோம்; ஆழ்வார்கள் என்றுதி நாமம்பெற்று அவ்விஷயத்தில் ஆழமூழ்கியிருக்கும் மஹான்களே ஆழமறிவார்கள். "பாலிற் கிடந்ததுவும் பண்டரங்க மேயதுவும், ஆலில் துயின்றதுவு மாரறிவார்—ஞாலத் தொருபொருளை வானவர்தம் மெய்ப்பொருளை அப்பி லருபொருளை யானறிந்த வாறு." [திருமழிசைப்பிரான்.]

20. கடல் கலங்காது, கலங்கினாலும் ஒரு நொடிப்பொழுதில்தானே தெளிவுபெறும்; அன்னவாறேதண்ணளியேவடிவெடுத்தஎம்பெருமானும்சீற்றங்கொள்ளமாட்டான்; ஔபாதிகமாகச் சீறினாலுமவன் அடுத்த க்ஷணத்திலே அநுக்ரஹம் பொங்கி நிற்பன்: "மாவாஸீபத மந்வகா:" என்னும்படி ஸுக்ரீவ மஹாராஜர் பக்கலிலும் 'ஸாகரம் சோஷயிஷ்யாமி" என்னும்படி ஸமுத்ரராஜன்பக்கலிலும் அளவுகடந்துசீறிச்சிவந்த இராமபிரான் அந்தந்த க்ஷணத்திலே அருள்பொலிய நின்றமை காண்க. காகாஸுரனைபோல்வார் திறத்திலுமிது காணத்தகும்.

21. கடல் அபரிச்சேத்யமாயினும் குறுமுனிவன் கையிலே ஆசமநத்திற்குப் போதும்படி அடங்கின்றது. யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ, என்னும்படி வேத வேதாந்தங்களுக்கும் அபரிச்சேத்யமான பகவத் விஷயம் ஆழ்வார்களுக்குப் பரிச்சேத்யமாயிற்று: "நண்ணாவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த, எண்ணாதனக ளெண்ணும் நன்முனிவர் இன்பந் தலைச்சிறப்பப், பண்ணார் பாடலின் கவிகள்யானாய்த் தன்னைத்தான்பாடி." (10-7-5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் இரண்டாமடிக்கு நம்பிள்ளையீடு ஸேவிக்க. நன்முனிவர்கள் எண்ணாதனகளை யெண்ணும்படியாக ஆழ்வார் திருவாய்மொழி பாடினாராம். எண்ணாதனக ளெண்ணுதலாவது என்னவென்னில்; "எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குணவிபூதிகளை விரிவாகவும் அழகாகவும் எடுத்துரைக்க ஒரு புஸ்தகமும் அவதரிக்கவில்லையே, ஆனந்த குணமொன்றைப் பேசப் புகுந்த உபநிஷத்தும் "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்னும்படி மீண்டதே; அப்படியல்லாமல் பகவத் விபூதிகளை விரிவாகப் பேச ஒரு க்ரந்தம் அவதரிக்க வேணும்" என்று முனிவர்கள் (திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்னே) எண்ணினார்களாம்; அப்படிப்பட்டவர்களே திருவாய்மொழி அவதரித்த பின்பு என்ன எண்ணினார்களென்றால், ஐயோ! எம்பெருமானுக்கு இன்

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிவரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
கோரோஜனை மாத்திரை
நஞ்சன்கூடு பல்பொடி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ஸாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்தது) மெடிகேடட்-டப்பி
ஸ்ரீ ச்யாவனப்ராசம் சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றாமணக்கு எண்ணெய் காஸ்டாரலகள்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

199183?

KALANILAYAM
REG. NO. M. 2324.

னஞ் சில குணங்களும் இன்னஞ் சில சேஷ்டிதங்களும் இல்லாமற்போயினவே!என வருந்தினர்களாம். இதன் கருத்தென்ன? எம்பெருமானுக்குள்ள ஸ்வரூப குண விபூதி அவதார சேஷ்டிதங்களடங்கலும் ஆழ்வாரருளிச் செயலில் அடங்கிவிட்டன வென்பதாம்.

22. கடலானது புல் துரும்பு முதலானவற்றை அலைமே லலைமோதி வெளியிலே தள்ளிவிடும்; மகரம் முதலானவற்றை அங்ஙனம் தள்ளாது உள்ளே கொண்டிருக்கும். இதற்குக் காரணமென்ன? ஸம்பந்தஜ்ஞான மில்லாதாரைத் தள்ளிவிடும்; ஸம்பந்தஞ்ஞானமுடையாரை அங்கீகரித்திருக்கும். எம்பெருமான் படியுமிதுவேயாம்; "அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு,(ஈசனடங்கெழிலஃதென்றடங்குகவுள்ளே.' (1-2-5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் நம்பிள்ளை யீட்டில் விளங்கவுள்ள விஷயமிது.

23. கடல் கடக்க அரிதாயினும் நாவாயினுல் எளிதாகக் கடக்கலாகும்; "பாதாம்போஜே வரத! பவதோ பக்தி நாவாம் ப்ரயச்ச" (முகுந்த மாலை) என்கிறபடியே பக்தியாகிற நாவாயைப் பெற்ருல் எம்பெருமானுகின்ற கடலையும் எளிதாகக்கடந்துவிடலாம். பத்துடையடியவர்க்கு எளியவன்.

24. கடலருகேயிருந்தாலும் விடாய் தீர்த்துக்கொள்ள வேறொரு நீர்நிலை தேட்டமாகும். சாஸ்த்ரங்களால் எம்பெருமானை எவ்வளவு அநுபவித்தாலும் அர்ச்சையிலிழிந்தாலன்றி ஆர்த்தி சாந்தியில்லையே.

25. எவ்வளவு காரிய நிர்ப்பந்தங்களிருந்தாலும் பெருஞ் செல்வர்கள் சிறிது போதாவது கடற்கரை சாராதிரார்கள்; அதுபோலவே பலகாரியங்களையும் சுருக்கிக்கொண்டு தினப்படி ஒருநாழிகைப்பொழுதாவது பகவத் கதையில் அந்வயியாதிரார்கள்.

அன்றியும், கடலில் அலை ஓயாது; எம்பெருமானுக்கும் "அலம்புரிந்த நெடுந் தடக்கை ஓயாது." கடல் கோஷித்துக்கொண்டேயிருக்கும், எம்பெருமானும் ஏதத் வ்ரதம் மமமோக்ஷ யிஷ்யாமி மா சுச: இத்யாதிகளைச்சொல்லிக் கோஷித்துக்கொண்டேயிருப்பன். கடல் ஒருநாளும் வற்ருது, எம்பெருமானுக்கும் ஒருநாளும் நாஸ்தித்வ முண்டாகாது. கடல் ஏறுவதும் வடிவதுமாயிருக்கும், எம்பெருமானும் ஸேவை ஸாதிப்பதும் மறைவதுமாயிருப்பன்— என்றிப்படிப் பட்ட அர்த்தங்களும் எத்தனையோ சொல்லலாம். விரிப்பிற் பெருகுமென்று இவ்வளவில் நிற்கின்றேன்.

வர்த்தமானம்

லண்டன் தோட்டத்தில் கூட்டம்:—சென்ற மாதத்திலே இங்கிலீஷ் நிர்வாணிகள் மகாநாடு லண்டன் நகருக்குப் பக்கத்திலுள்ள ஓர் தோட்டத்திலே கூடியது. இதுவே நிர்வாணிகள் தேசீய முதல் மகாநாடாகும். சுமார் 200 ஆண், பெண்கள் கூடியிருந்தார்கள். நிர்வாணிகள் மகாநாடு கூடப்போகிறதென்ற செய்தி பகிரங்க ரகசியமாக இருந்தது. ஆனுல் எங்கு நடைபெறப் போகிறதென்பதுமட்டும்ரகசியமாகவே இருந்தது. கூட்டத்திலிருந்த பலர் நிர்வாணமாகவேஇருந்தார்கள். மற்றும் சிலர் ஸ்நான உடை தரித்திருந்தனர். கூட்டத்தில் பெண்களைவிட, ஆண்கள் எண்ணிக்கை மூன்றுமடங்கு அதிகமாயிருந்தது.எனவே ஆண்களே இவ்விஷயத்தில் அதிக ஆர்வம் கொண்டிருக்கிருர்களென்று ஊகிக்கவேண்டியதாயிருக்கிறது.

NATIONAL
INSURANCE COMPANY, LIMITED.
Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.

1933 Results.

New Business Completed
exceeds ... ... Rs. 1,67,00,000

The Company with a steady progress all round.
All forms of life assurance policies issued at low safe rates of premium.

Specialities.

Female Lives
Joint Lives
Permanent Protection Policies
Triple Benefit Policies.
Marriage & Future Provision Policies.

For agencies please apply to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
Managers.

Consult
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
Head Office:—
NATIONAL INSURANCE BUILDING,
362, China Bazar Rd, Esplanade, Madras.
for Fire, Motor & Accident policies.

A sound Company.

Please apply for particulars to:—

Branch Secretary,
362, China Bazar Road,
Esplanade, Madras.
OR
R. G. DAS & Co.,
Managers.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யுரன்ஸ் கம்பெனி, லிமிடெட், சென்னை.
ஹெட் ஆபீஸ்:—சென்னை. 1906ஷு ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியாவில், லைப் இன்ஷூயரன்ஸின் சிறந்த பயன்கள் குறைந்தசெலவில் கிடைக்கும்.
யுனைடெட் இந்தியாவில் பாலிஸி எடுத்துக்கொள்வது மிகச்சிறந்தஇன்வெஸ்ட்மெண்டும்,வயது காலத்திற்கும் குடும்பத்திற்கும் இணையற்ற ஆதரவும் ஆகும்.
யுனைடெட் இந்தியாவே, தென்னிந்தியாவில் மற்றெல்லாக் கம்பெனிகளுக்கும் முன்னுல் ஸ்தாபித்தது.
யுனைடெட் இந்தியா முற்றிலும் பத்திரமானதும் கெட்டிதிட்ட முடையதும் ஆன கம்பனி.
ஹெட் ஆபீஸ்:— செம்புதாஸ் தெரு, சென்னை. அல்லது இந்தியா, பர்மா, ஸிலோனில் உள்ள பிராஞ்சுகள்
இவைகளுக்கு எழுதி முழு விவரமும் இது பற்றிய பிரசுரங்களும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா தேசத்து இணையற்ற இரத்தினம்
ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்
தேக பலத்தையும், இரத்த விருத்தியையும், ஞாபக சக்தியையும், தாது புஷ்டியையும் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம். சென்ற 53வருஷங்களாக இலட்சக்கணக்கான ஜனங்களால் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1
இனும்! இனும்!!
"இன்பவாழ்க்கையாலடைந்த சக்தி"
இனுமாகவும் தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)